மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 25 புதன்கிழமை (10.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 288

# வவுனியா படைத்தலைமையகம் மீது புலிகள் 3 வழி அதிரடித் தாக்குதல்கள்!

## விமானங்கள், பீரங்கிகள், கரும்புலிகள் இணைந்து சமர்

கொழும்பு, செப்ரெம்பர் 10

வவுனியாவில் உள்ள வன்னிப் பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் மீது நேற்று அதிகாலை மூன்று வழிகளில் விடு தலைப் புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதல்களில் அந்தத் தளத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாக இணை யத்தளச் செய்திகள் தெரிவித்தன.

தமது விமானங்கள் மூலம் குண்டு வீசியும், ஆட்லறிகள் மூலம் ஷெல் குண்டுகளை ஏவியும், கரும்புலிப் படை அணி மூலம் ஊடுருவியும் புலிகள் இந்தத் தாக்குதல்களை நேற்று விடியும்வேளை நடத்தியிருக்கிறார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்திய விமானங்கள் பாதுகாப்பாகத் தளம் மீண்டன

### புலிகள் உத்தியோக பூர்வ அறிக்கையில் அறிவிப்பு

கொழும்பு, செப். 10

வவுனியா கூட்டு நடவடிக்கைத்தளம் மீது மும்மார்க்கங்களில் தாங்கள் நடத்திய தாக்குதலில் அத்தளம் பெரும் சிதைவுக்கு உள்ளாகியது என்றும் -

தாக்குதல் நடத்திய தங்களது விமானங்கள் பாதுகாப்பாகத் தமது தளத்துக்கு மீண்டன என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்திருக்கிறார்கள்.

வவுனியாவில் நேற்றுக் காலை தாங்கள் நடத்திய தாக்குதல் குறித்து நேற்று முன்னிரவு விடுதலைப் புலிகள் உத்தியோக

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானத்தை துரத்திச் சென்று விமானப்படையினர் சுட்டு வீழ்த்தினர்

### அரசு தரப்பில் அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 10

வவுனியா இராணுவத் தளம் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பிச் சென்ற விடுதலைப் புலிகளின் விமானங்களில் ஒன்றை விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் துரத்திச் சென்று சுட்டு வீழ்த்தின என்று அரசுத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

புலிகளின் விமானங்கள் வருகின்றமை தொடர்பான தகவல் 'ராடர்' கருவி மூலம் உறுதிப்படுத்தப்பட்டவுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து 'மிக்' ரக விமானங்கள் வவுனியா நோக்கி விரைந்து சென்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலில் 14 பேர் பலி என்கிறது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, செப். 10

வவுனியா விமானப்படை முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 12 படையினரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், பொது மகன் ஒருவருமாக மொத்தம் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 15 படையினர், 8 பொலிஸ், (12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரம் ஸ்தம்பித்தது

வவுனியா, செப்.10

வவுனியா விமானத்தளம் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலை யடுத்து வவுனியா நகர் நேற்று முழுமையாக ஸ்தம்பித்தது.


கடைகள், சந்தைகள் யாவும் இழுத்து மூடப்பட்டுக் கிடந்தன. அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளும் இயங்கவில்லை. வீதிகளில் சன நடமாட்டம் காணப் படவில்லை. நகரம் வெறிச்சோடிக்கிடந்தது. (12ஆம்பக்கம் பார்க்க)

## கனகராயன் குளப் பகுதியிலும் பிற்பகலில் விமானக் குண்டுவீச்சு

கொழும்பு, செப். 10

வன்னியில் கனகராயன்குளம், உடையார் கட்டுக் குளம் ஆகிய பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது நேற்றுப் பிற்பகலில் 'ஜெற்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின என்று பாதுகாப்புத்தரப்பு அறிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)



## இந்திரா—II ராடரை இயக்கிக் கொண்டிருந்த இந்திய விமானப்படை சார்ஜண்டுகளும் காயம்

### புலிகளின் தாக்குதல் குட்டை உடைத்துவிட்டது

கொழும்பு,செப்.10

வவுனியாவில் உள்ள இலங்கை விமானப்படை 'ராடர்' தளத்தை இலக்கு வைத்து புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில், அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்திய விமானப் படைத் தொழில்நுட்பவியலாளர்களும் காயமடைந் திருக்கின்றனர்.

இந்திய விமானப் படையின் சார்ஜண்ட் தர நிலையைச் சேர்ந்த சிந்தாமணி ரவூத் மற்றும் ஏ.கே.தாக்கூர் ஆகியோரே இத்தாக்குதலில் காயமடைந்திருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட 'இந்திரா -II' ரக ராடரை இந்தியாவே இலங்கைக்கு வழங்கியிருந்தது என்பது தெரிந்ததே.

அந்த ராடரை இயக்குவது மற்றும் பராமரிப்பது போன்ற பணியை இந்திய விமானப்படையைச் சேர்ந்த இந்த தொழில்நுட்பவியலாளர்களே

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமைப்புக்களின் பணியாளரை வன்னியிலிருந்து திரும்ப அழைக்க முடிவு

கொழும்பு, செப்.10

வன்னியில் பணிபுரியும் தனது மனிதாபிமானப் பணியாளர்களை திரும்ப அழைக்கப்போவதாக ஐ.நாவின் இலங்கை வதிவிட மற்றும் மனிதாபிமானப் பணிக ளின் இணைப்பு அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது.

கால அட்டவணை ஒன்றின் அடிப்படையில் திரும்ப அழைக்கப்படும் பணியாளர்களை வேறு இடங்களுக்கு நியமிக்கும் வேலைகள் இந்த வாரம் ஆரம்பமாகும் என இந்த அலுவலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியின் பாதுகாப்பைத் தொடர்ந்து உறுதிப்படுத்த முடியாத காரணத்தால் அங்கு பணிபுரியும் ஐ.நா மற்றும் தொண்டு நிறுவனங்களின் மனிதாபிமானப் பணியா

(12ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக்குழு வன்னியிலிருந்து வெளியேறாது பணிகளைத் தொடரும்

கொழும்பு, செப்.10

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வன்னியிலிருந்து வெளியேறாது. மனி தாபிமானப் பணிகள் தேவைப்படும் மக் களுடன் தங்கியிருந்து தாங்கள் தொடர்ந்தும் சேவையாற்றப்போவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து அரசு சாரா தொண்டு நிறுவன ஊழியர்கள் வெளியேற வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரியுள்ள நிலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இவ்வாறு அறிவித்திருக்கிறது.

கொழும்பிலுள்ள ஐ.சி.ஆர்.சியின் தலைமையகம் வெளியிட்டுள்ள ஊடக

(12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாக்குதலுக்குப் புறப்படுமுன் தலைவர் வே.பிரபாகரனுடன் கரும்புலிகள் காணப்படுகின்றனர்.

கரும்புலிகளான லெப்.கேணல் மதியழகன், மேஜர் ஆனந்தி, கப்டன் கனிமதி, கப்டன் முத்துநகை, கப்டன் அறிவுத்தமிழ், லெப்.கேணல் வினோதன், மேஜர் நிலாகரன், கப்டன் எழிலன், கப்டன் அகிலன், கப்டன் நிமலன் ஆகியோர் நேற்றைய தாக்குதலில் களப் பலியாகியுள்ளவர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (படம்-புதினம் இணையத்தளம்)



நேற்றைய தாக்குதலில் காயமடைந்த சிப்பாய் ஒருவருக்கு சிகிச்சையளிக்கும் போது..



நேற்றைய தாக்குதலில் உயிரிழந்த கரும்புலி ஒருவர்...

(படங்கள்- இராணுவ இணையத்தளம்)

## நேற்று மாலையிலும் புலிகள் பீரங்கித் தாக்குதல்

வவுனியா இராணுவத் தலைமையகம் மீது நேற்று மாலை 4.35 மணியளவில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. புலிகளின் நான்கு ஷெல்கள் படைத்தளத்தின் மையப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன என்று தெரிவிக்கப் பட்டது. எனினும், இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பாக நேற்று இரவுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (வ-சி)

# விமானப்படையின் 'மிக்' விமானங்கள் புதுக்குடியிருப்பு நகர் மீது குண்டுமழை!

## ஐந்து கடைகள் நாசம்; பாடசாலைக்கும் சேதம்

வவுனியா, செப். 10

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு நகரப் பகுதி மற்றும் பாடசாலை ஆகியனவற்றின் மீது விமானப்படையின் விமானங்கள் நேற்று அதிகாலை குண்டுத் தாக்குதலை நடத்தின.

புதுக்குடியிருப்பு நகரப்பகுதிமீது நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 முதல் 5.00 மணிவரை விமானப்படையின் மிக் - 27 ரக விமானங்களே தாக்குதலை நடத்தின.

மூன்று தடவைகள் அடுத்தடுத்து வீசப்பட்ட குண்டுகளில் புதுக்குடியிருப்பு நகர் அதிர்ந்தது. அங்குள்ள ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை சேதமடைந்துள்ளது. நகரில் உள்ள ஐந்து கடைகள் முற்றாக அழிந்துள்ளன. மேலும் சில கடைகள் சேதமடைந்தன.

பொதுமக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளதுடன் இத்தாக்குதலில் 50 வயதுடைய சுலோசனா என்ற பெண் காயமடைந்துள்ளார்.

வவுனியாவில் உள்ள ஸ்ரீலங்கா படைத் தலைமையகம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் நேற்று அதிகாலை நடத்திய குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து விமானப்படை வன்னியின் பல பாகங்களில் கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளது என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அதிகாலை நேரமாதலால் நகரப்பகுதியில் சன நடமாட்டம் இருக்கவில்லை. அதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

TOSHIBA

e-STUDIO

Digital Multi Functional Copier

A3 printing

A3 Scanning

A3 Copying

High durability

High Image quality

Easy operation



Special Price 171350/=

Mega Offer in Jaffna

01 செப்ரெம்பர் முதல் 31 ஒக்டோபர் - 2008 வரை

Toshiba e-studio 166 Multi Functional Photo Copier

நியம விலையுடன் 55000 பிரதி எடுப்பதற்கான Toner முற்றிலும் இலவசம்



TOSHIBA DIGITAL PHOTOCOPIER
MODEL e-STUDIO 166

- 16 CPM Copier
- 16 MB Memory
- A3 - A6 Paper size
- 25% - 200% Zoom
- One 250 sheet cassettle
- 100 Sheet bypass
- 1-999 Continuous copying
- Standard USB printing
- 600 x 2400 dpi resolution
- Standard twain scanning

வெகு விரைவில்

யாழ் பிரதான வீதியில்
பிரமாண்டமான காட்சியறையுடன்
சேவையை வழங்கவுள்ளோம்.

North Link Engineering
Authorized dealer for
John Keells Office Automation (Pvt) Ltd.
320/1, Union Place, Colombo - 2 Sri Lanka.
Tele : +94 11 231300, +94 11 5332611, +94 11 4702611 Fax : +94 11 2431745 E-mail : jkoa@keels.com Web : www.jkoa.com

வடமாகாணத்திற்கான விநியோகஸ்தர்

**Jaffna**
North Link Engineering
Nagalingam Road, Kokuvil West, Kokuvil.
Tele : +94 21 4591314, 0777 448133, 077 3867737 Fax : +94 21 4591314 E-mail : northlinkeng@yahoo.com

**Vavuniya**
N0. 67, Kovil Road, Kurumankadu, Vavuniya.
Tele : +94 24 2223238 Fax : +94 24 2223238 E-mail : northlinkeng@yahoo.com

மேலதிக தொடர்புகளுக்கும்
இலவச அறிவூட்டல்களுக்கும்
அசோக் : 0777 725241
நௌசான் : 0777 770197
மில்றோய் : 077 3182838
மயூரன் : 0777 593743, 077 3956612

**Spoken English With Grammar**

Lecture
By: Mr.Nishanthan (Dip. in English)

ஆங்கிலத்தில் மிக குறுகிய காலத்தில் பேச, எழுத, வாசிக்க உரையாட புதிய பிரிவுகள் பின்வரும் 3 நிறுவனங்களில் ஆரம்பமாகின்றன.

1. பொருளியல் கல்லூரி -யாழ்ப்பாணம்
சனி, ஞாயிறு 2 p.m.(13.09.2008)

2. பொருளியற் கல்லூரி இணுவில்
செவ்., வியா. 3.30 p.m (11.09.2008)

3. BARATHY- சித்தன்கேணி
சனி, ஞாயிறு 3.30 p.m (13.09.2008)

நீங்கள் விரும்பிய இடங்களில் அனுமதிகளைப் பெறலாம்.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(77706)

**விற்பனைக்கு**

பாவனையிலுள்ள மொரிஸ் மைனர் 1000 கார் ஒன்றும், கப்பல் சேவையில் உள்ள 26 சிறி தொடர் இலக்கத்தைக் கொண்ட லேடன் லொறி ஒன்றும் (டோக்கனுடன்) விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளும் முகவரி,
க. இராசரத்தினம்,
மாரி அம்மன் வீதி, அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**கடை வாடகைக்கு**

K.K.S.வீதி, யாழ்ப்பாணத்தில் (சிவன் கோயிலுக்கு அருகில்) உள்ள கடை ஒன்று வாடகைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
T.P:0774360187, 021 226 4528.

**உதவியாளர் தேவை**

றெஜிபோமில் எழுத்து, உருவங்களை வடிவமைப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. (அமைவிடத்திலிருந்து 2 km இற்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
சந்திக்கும் நேரம் :
காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை.
சித்தா ஸ்கிறின் பிறின்ரிங் அன்ட் றெஜிபோம் வேர்க்ஸ்
இல. 49, அச்சக லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினரால் கைதடி - நுணாவில் அறவழி நிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கற்றல் வள பயன்பாட்டு மையக் கட்டடத்தின் திறப்பு விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும் கனேடிய உலகப் பல்கலைக்கழகச் சேவை நிறுவனத்தின் யாழ்.மாவட்ட வெளிக்களப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கத்திற்கு அறவழி நிலையச் செயலாளர் நினைவுப் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நிலையத் தலைவர் வீ.ஸ்ரீசக்திவேல், சிறுவர் அபிவிருத்தி நிலையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: தென்னவன்)*

## தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாக
# சுயதொழில் உதவி கோரியவர்களில் மேலும் 15 பேருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,செப்.10

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினூடாக சுயதொழில் உதவி கோரி மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்தோரில் மேலும் 15 பேருக்கு உதவித்தொகை கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் எதிர்வரும் 17ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்வருவோருக்கு இக்கொடுப்பனவுத் தொகை கிடைத்துள்ளதால் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் அன்றைய தினம் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இராசரத்தினம் தவமணிதேவி - கல்வயல், இராசரத்தினம் இராஜேஸ்வரி - தச்சன்தோப்பு, மகேந்திரா விமலாதேவி - சங்கத்தானை, அபயராஜசிங்கம் தங்கமலர் - கைதடி மேற்கு, தேவராஜா ஞானேஸ்வரி- சரசாலை தெற்கு, சந்திரசேகரம் பராசக்தி- கெற்பேலி மேற்கு, மகாதேவன் காமினி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, வசந்தராஜா விஜிதா - மீசாலை வடக்கு, செல்வராசா நாகேஸ்வரி - மிருசுவில் தெற்கு, நடேசு சரஸ்வதி - மிருசுவில் தெற்கு, கந்தன் மனோன்மணி - மிருசுவில் தெற்கு, சின்னக்கறுப்பன் கறுப்பையா - நுணாவில் கிழக்கு, கிறிஸ்துராசா மல்லீஸ்வரி - நுணாவில் மேற்கு, பரமேஸ்வரன் யோகாம்பிகை - புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி, கந்தையா செல்லம்மா - சரசாலை தெற்கு.

ஏற்கனவே 20 பேருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவு பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-207)

# துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலையில் சிரமதானப் பணிகள்

கட்டைவேலி,செப்.10

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

அதிபர் கே.குகநாதன் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பங்குபற்றி பங்களிப்பை வழங்கினர். (202-275)

# யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிலிருந்து சமுர்த்தி புலமைப் பரிசிலுக்கு 20 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி 'சிப்தொற' புலமைப் பரிசிலுக்கு 20 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரங்களை பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ அறிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:

ஜே/71 சூசை அன்ரனி ஜெறியோன்சன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஜே/68 தேவராசா கிளெளடியா - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஜே/63 சுந்தரலிங்கம் கஜேந்திரன் - சென்.ஜோன்' கல்லூரி, ஜே/69 அன்ரனி லோறன்ஸ் மேரி நிகிந்தா - சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, ஜே/71 கென்றிபோட் ஆஷாபரேக்கா - திருக்குடும்ப கன்னியர்மடம்,

ஜே/70 சிறிஸ்கந்தராசா கபில்ராஜ் - சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம், ஜே/69 அன்ரன் ஸ்ராலின் அனோஜினி - திருக்குடும்ப கன்னியர்மடம், ஜே/65 கனியூட் ஜெனற்கனீஸி - திருக்குடும்ப கன்னியர் மடம், ஜே/65 அந்தோனிப்பிள்ளை கஜிந்தா - திருக்குடும்ப கன்னியர்மடம், ஜே/66 சந்திரன் மொட்சாயினி - சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்,

ஜே/86 கிருஸ்ணன் தற்பரன் - வைத்தீஸ்வராக் கல்லூரி, ஜே/81 நாகராசா ஜெனோசன் - யாழ்.மத்திய கல்லூரி, ஜே/78 அன்ரன் கத்தரீனா - திருக்குடும்ப கன்னியர் மடம், ஜே/85 கிறிஸ்துராசா குயின்ரன் நெலிங்ரா - திருக்குடும்ப கன்னியர்மடம், ஜே/85 செலஸ்ரீன் அலன்பேக்கர் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி,

ஜே/80 கலியுகவரதராசா ரிசாந்தினி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ஜே/78 செல்வரெத்தினம் ரேணுகா - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஜே/80 சிவநேசன் செந்தூரன் - யாழ்.இந்துக் கல்லூரி, நித்தியானந்தன் திவ்யா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ஜே/78 சண்முகராசா சஞ்சிகா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (203)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.10

குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் பணியாற்றும் முறைசாராக் கல்வி ஆளணியினருக்கு கருத்தரங்கும் செயற்பட்டறையும் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்களுக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் கருத்தரங்கும் செயற்பட்டறையும் நடத்தப்படவுள்ளன.

கோட்டக்கல்வி அதிகாரிகள், முறைசாராக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், முறைசாரக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், கோட்ட மட்ட முறைசாராக்கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரை இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (202-302)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட கவனிப்புக்குரிய மாணவர்களின் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற உள்ளதாக வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-302)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா யாழ். நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்குப் போயா ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வேதபாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், தியானம், பஜனை, பாலவிகாஸ் நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

தீவக வலய லயன்ஸ் பிரிவின் முதியோர் கௌரவிப்பு விழா மற்றும் மருத்துவ முகாம் என்பன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

லயன்ஸ் பிராந்திய தலைவர் குமாரசாமி கங்கைவேணியன் தலைமையில் வேலணை மத்திய மகாவித்தியாலத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். (202-95)




# நவக்கிரியில் தாய் மற்றும் மகளுக்கு வீடு சென்று ஆயுததாரிகள் சூடு!

யாழ்ப்பாணம்,செப்.10

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் வீடு ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தனர். இதில் அங்கிருந்த தாயும் மகளும் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுததாரிகள் குறிப்பிட்ட வீட்டுக்குள் நேரே புகுந்தனர். அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று அறியப்படுகிறது.

இதில் நவரத்தினம் பூரணம் (வயது 52), அவரது மகளான நவரத்தினம் துசாநந்தினி (வயது 30) ஆகியோர் காயமடைந்தனர்.

அயலவர்களின் உதவியுடன் காயமுற்ற தாயும் மகளும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ-1-07)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த ஒகஸ்ட் மாதம் வரை இத்திட்டத்தில் ஆயிரத்து 252 பேர் இணைந்து கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்பும் சுயதொழில் புரிவோர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

# எதிர்காலத்தில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்விகள் மிக அவசியம்

## பருத்தித்துறைப் பிரதேச செயலர் வலியுறுத்து

வடமராட்சி,செப்.10

எதிர்காலத்தில் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும் ஆங்கிலக் கல்வி மற்றும் கணனிக் கல்வி என்பன மிகவும் அவசியமானவை. எதிர்காலச் சந்ததியினர் இவற்றை கட்டாயமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் புலோலி காந்தியூர் சனசமூக நிலைய முன்பள்ளிக் கட்டடத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

சனசமூக நிலைய முன்னாள் தலைவர் ச.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பிரதேச செயலர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

சிறுவர் பாதுகாப்பு நிதியம் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் பதினொரு முன்பள்ளிகளைக் கட்டுவதற்கு உறுதியளித்திருந்தது. அதில் ஒன்றே இந்த முன்பள்ளி.

இருபது லட்சம் ரூபா செலவில் இம் முன்பள்ளி, விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட்டு விளையாட்டு உபகரணங்களும் இங்கு வழங்கப்பட்டு நவீன வசதிகளுடன் திகழ்கின்றது.

பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் வயதில் பாடசாலைக்குச் செல்லவேண்டும்.

பொழுதுகளை வீணடிக்காமல் உரிய காலங்களில் பாடசாலைக் கல்வியைப் பிள்ளைகள் மேற்கொள்ளச் செய்வதில் பெற்றோர்கள் மிகுந்த அக்கறை காட்டவேண்டும்.

### தொழிற்பயிற்சி

அதேவேளை பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் தொழிற்பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தொழிற்பயிற்சி தற்போது பல இடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஆங்கிலம், கணனி ஆகியவற்றையும் கற்றுக்கொள்ளவேண்டும். ஆங்கில, கணனி அறிவு இருந்தால் மட்டுமே எதிர்காலத்தில் தொழில்களை மட்டுமன்றி ஏனைய தேவைகளையும் நிறைவுசெய்யமுடியும்.

உன்னதமான ஒருவரின் பெயரில் இக்கிராமம் இருந்து வருகிறது. இந்தப் பெருமைமிக்க தலைவரைப் பின்பற்றி இக்கிராமம் ஏனைய கிராமங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டும் - என்றார்.

பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் உரையாற்றுகையில்:

முன்பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களின் தொகை குறைந்து வருகிறது.

ஒரு நாடகம் மேடையேற ஒத்திகை பார்ப்பதுபோல, ஒலிபரப்பை மேற்கொள்ள பரீட்சார்த்த ஒலிபரப்பை மேற்கொள்வது போல சிறுவர்கள் முதலில் முன்பள்ளியில் கற்கவேண்டும்.

முன்பள்ளிகள்தான் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ள வழி சமைக்கும் படிக்கற்களாகும்.

ஆகையால் பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்காமல் முன்பள்ளிகளுக்கு அனுப்புவதில் பெற்றோர்கள் ஆர்வம் காட்டவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்கான சகல வசதிகளும் கொண்ட விளையாட்டு மைதானத்தைப் பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் திறந்துவைத்தார். முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (203-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பளப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கோரி
# சர்வதேச நீதிமன்றம் செல்ல ஆசிரியர் சங்கங்கள் முடிவு

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வதற்காக சர்வதேச நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்போவதாக ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தமது சம்பள அதிகரிப்புத் தொடர்பில் அரசு நீதியான முறையில் நடந்து கொள்ளும் என்று சிறிதளவேனும் நம்பிக்கையில்லை என அவை தெரிவித்துள்ளன. இது தொடர்பாக இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் கூறியவை வருமாறு:-

"எமது சம்பள அதிகரிப்புத் தொடர்பாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. இருப்பினும் எமது கோரிக்கைக்கு ஏற்ப அரசு சம்பளத்தை அதிகரித்துத் தரும் என்ற நம்பிக்கை எமக்கில்லை.

இந்த விடயத்தில் நீதியான முறையில் செயற்படும் எண்ணம் அரசுக்கு இருந்திருந்தால் இது தொடர்பாக நீதிமன்றம் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. நாம் தொடர்ச்சியாக உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியைப் பகிஷ்கரித்து வருகிறோம். மாணவர்களின் வாழ்க்கையுடன் விளையாடும் நோக்கில் நாம் இதைச் செய்யவில்லை.

எமது கோரிக்கையை அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எமக்கில்லாததால் நாம் எமது பிரச்சினையை சர்வதேச நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்போகிறோம். அந்த நீதிமன்றம் மூலம் எமது சம்பளப் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வு ஒன்று கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம் - என்றார்.

# காட்டுப்பன்றி தாக்கியதில் குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், செப்.10

காணியில் தேங்காய் எடுப்பதற்காகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காட்டுப் பன்றியால் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் சரசாலை மத்தியில் இடம்பெற்றது.

தனது வீட்டுக்கருகிலுள்ள காணியில் தேங்காய் எடுப்பதற்காகச் சென்ற சரசாலை மத்தியைச் சேர்ந்த எஸ்.தவச்செல்வம் (வயது 35) என்ற குடும்பஸ்தரே பன்றியினால் தாக்கப்பட்டவராவார்.

தேங்காய் எடுப்பதற்காகக் குனிந்த வேளை எதிரே வந்த காட்டுப் பன்றி அவரை முட்டிமோதி, தூக்கி வீசிவிட்டு மீண்டும் தனது ஈறினால் தாக்கிக் காயப்படுத்திவிட்டு ஓடியது. இதனால் காயமடைந்த குடும்பஸ்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (அ-1-236)

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 4இல் கல்வி கற்கும்
மாணவன் செல்வன் ஞா.மனோராஜன்
அவர்களினதும் அவர்களின் அன்புத் தாய்
திருமதி நாகேஸ்வரி ஞானேஸ்வரக்குருக்கள்
அவர்களினதும் அகால மரணம் குறித்து பேரதிர்ச்சியுடன் இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி நிற்கின்றோம்.
இவர்களின் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

## மரண அறிவித்தல்
### திருமதி சௌந்தரிப்பிள்ளை சின்னராசா



மூதூர், கூனித்தீவைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌந்தரிப்பிள்ளை சின்னராசா 08.09.2008 திங்கட்கிழமை மன்னாரில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசாவின் மனைவியும் கிருஷ்ணகுமார் ஆசிரியர் (முன்னாள் உப அதிபர், யாழ். இந்து கல்லூரி), ஜெயக்குமார் (மன்னார்), சாந்தகுமார் (மன்னார்), இரத்தினகுமார் (மன்னார்), தனலெட்சுமி (பருத்தித்துறை), உதய குமார் (வவுனியா), மஹாலட்சுமி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.09.2008) செவ்வாய்க்கிழமை மன்னாரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
தொலைபேசி இல.: 023 2222451
தகவல்: குடும்பத்தினர். (78314)


## IMS
Market Lane, Manipay

புதிய பிரிவுகள் ஆரம்பம்

- ★ MS. Office.
- ★ Visual Basic.
- ★ Oracle 8i.
- ★ Computer Hard Ware.
- ★ DTP.
- ★ Java.
- ★ C++.

1500/=

10.09.08 தொடக்கம் 10.10.08 வரை அனைத்துப் பாடநெறிகளுக்குமான கட்டணம் 1500/= மட்டுமே. (பதிவுகளுக்கு முந்துங்கள்). (78293)

Institute of Micro Systems


## தவறிவிட்டது

54/A, பள்ளிதொர வீதி, தெஹிவளை என்னும் முகவரியுடைய சாந்தினி ஜெகநாதராஜா என்பவரின் தேசிய அ.அட்டையும் (675731837 V), டிசேந்தினி தில்லையம்பலம், சாந்தினி ஜெகநாதராஜா ஆகியோரின் பெயர் கொண்ட மோட்டார் சைக்கிள் ஆவணங்களும் கொழும்புத்துறை, இலந்தைக்குளத்துக்கும் விபுலானந்தர் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. NO. 2, விதானையார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.




## வடமராட்சியில் புதிய பயிற்சிப் பிரிவுகள்
### 11.09.2008 முதல் ஆரம்பம்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

முக ஒப்பனைகளும் கூந்தல் அலங்காரமும், தையல் பயிற்சி, ஐசிங் கேக் வடிவமைத்தல், உடைகளுக்கு அலங்கார வர்ணமிடல், சாறி, சல்வார் அலங்கார வேலை, பூவேலை, இலகு சாறி/சல்வார் கட்டிங், கைப்பணி, கம்பளி நூல்/முத்துமாலை வடிவமைப்பு, ஓவியக்கலை, ஓகன் இன்னும் பல பயிற்சி நெறிகள்.

மேலதிக தகவல்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளலாம்.

தூரிகை
நுண்கலை வளாகம்
ம.ம.வி. வீதி, நெல்லியடி.

(8/554564)



## மகளிருக்கான
### 23 ஆண்டு கால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
# கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

- ❊ **3 மாத கால** கேக் ஐசிங், ஐசிங் பூக்கள், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Work (சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work).
  மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facial, மணமகள் அலங்கார வகுப்புகள் ஆரம்பமாகும்.
- ❊ தையலில் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள்.
- ❊ தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, கவுண், சட்டை, Skirts தைத்தல்.
- ❊ **இருவாரகால** சேலையில் வர்ணம் தீட்டல் (Saree Painting) வகுப்புகள்.

**சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 14-09-2008**
**கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-09-2008**

☞ மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
பதிவாளர்.



ஓம் விநாயகர் விஸ்வப் பிரம்மணே நமஹ

## திருமண நல்வாழ்த்துகள்

இன்று (10.09.2008) புதன்கிழமை பி.ப.4.33 தொடக்கம் 5.30 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் சந்நிதானத்தில் (நாச்சிமார் கோவில் திருமாங்கல்யதாரணம் செய்யும்

**திரு.திருமதி ஜெகநாதன் கார்த்திகா**

தம்பதியினரை



வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணையுடன் பலபேறும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இனிதே வாழ்த்துகிறோம்

இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

திரு.சி.சண்முகம் குடும்பத்தினர்
(பந்தர்)



# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008 80% Off

| Course | Old fee | Fee | Duration |
|---|---|---|---|
| Diploma in Computer Science | ~~10,750~~ | 2,150 | 4 Months |
| Honours Dip in Computer Science | ~~13,000~~ | 2,600 | 5 Months |
| Diploma in Web page Designing | ~~10,750~~ | 2,150 | 4 Months |
| Diploma in Graphic Designing | ~~10,750~~ | 2,150 | 4 Months |
| Diploma in Desktop Publishing | ~~10,000~~ | 2,000 | 4 Months |
| Dip in Hardware Engineering | ~~10,000~~ | 2,000 | 3 Months |
| Diploma in Microsoft Office | | 1,500 | 3 Months |
| Dip in Auto CAD | [illegible] | 2,000 | 3 Months |
| Accounting Package | [illegible] | 2,150 | 2 Months |

50% OFF

| Course | Old fee | Fee |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |
| Diploma in Networking | ~~10,000~~ | 5,000 |

ஆரம்பம் :
Batch I: 12/09/2008
Batch II: 13/09/2008
Batch III: 14/09/2008
Batch IV: 17/09/2008
10.00 AM

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் பொருத்தமான கற்கை நெறியை தேர்ந்தெடுத்து விடுமுறைகாலத்தை பயனுடையதாக்கிகொள்ளுங்கள்.

---- 25 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.----


## சீட்டிழுப்பு முடிவுகள்

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்
08, குருசோ வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

உலக சமாதான தினம் புரட்டாதி 21. இத்தினத்தினை முன்னிட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உதவிநிதிக்காக 08.09.2008 அன்று நடத்தப்பட்ட அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

முதல் பரிசுக்கான இலக்கம் - 801
இரண்டாம் பரிசுக்கான இலக்கம் - 2419
மூன்றாம் பரிசுக்கான இலக்கம் - 1876
ஐந்து ஆறுதல் பரிசுக்கான இலக்கங்கள்: 394,733,608,1481,398

மேற்படி பரிசுகளை வென்ற வெற்றியாளர்களுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி செல்வநாயகபுரம் அச்சுவேலி மேற்கில், நடைபெறும் இணைவோம் உருவாக்குவோம் கலாசார விழாவில் பரிசில்கள் வழங்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

(78313) நிர்வாகம்.

## உடன் தேவை

முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு -

பக்க வடிவமைப்பில் பயிற்சி உள்ள ஒருவருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவம் உள்ள ஆண்கள், பகுதி நேர வேலைக்குத் தேவை.

தமிழில் நல்ல தேர்ச்சியுடையவர்களுக்கும் யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஆகப் பிந்தியது 12.09.2008க்கு முன் பூரண சுயவிவரங்களுடனும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும்.

இலக்கம்:- அ- 20098
மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# பொலிகண்டி இருப்பைமூலை
## (உப்புக் கிணற்றடியான்)
## அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானின்
# சித்திரத்தேர், சித்திரச் சப்பர வெள்ளோட்டம்



(சர்வதாரி வருடம் ஆவணித் திங்கள் 25ஆம் நாள் இன்று 10.09.2008 புதன்கிழமை)


### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி



பொலிகண்டி இருப்பைமூலையில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் சித்திவிநாயகப் பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மனித வாழ்க்கையை மேலடையச் செய்வது ஆலய வழிபாடாகும். இத னையே நம் சமயம் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் நித்தமும், எம்பிரான் கோயில் புகுக என்றும், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும் கூறுகின்றது. ஆலய விழாக்களில் தேர்த்திருவிழா சிறப்புடையதாக அமைகின்றது. தேரின் வடம் பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம் என்பது முதுமொழி. தேரில் இறை வன் எழுந்தருளி அருள் தருவது அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞான ஒளியை ஏற்றுவதற்காகும். தேரின் வடிவமைப்பு உலக சஞ்சரமாகும். மேற்பகுதி ஆகாயமாகும். கீழ்ப்பகுதி பூலோகமாகும். இறைவன் எழுந்தருளும் நடுப்பகுதி ஆன்ம ஈடேற்றமாகும். பல தத்துவங்களைக் கொண்ட சித்திரத் தேரை விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுக்கு சிற்பக்கலைஞர்கள் உருவாக்கியமை இவ்வாலயத்தின் வரலாற்றுப் பெருமையாகும். இதனை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களைப் பாராட்டுகின்றோம். இவ்வறப் பணியினூடாக ஆலயத்திற்கும் ஊருக்கும் பெருமை சேர்க்கும் அன்பு உள்ளங்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இன்று வெளிவரும் நூல் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையவும் இந் நூலை வெளியிடும் ஆசிரியருக்கு இறைவ னுடைய ஆசி கிடைப்பதாக. அனைவரும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**



### அரச அதிபரின் ஆசிச் ஏசய்தி



''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாலயங்கள் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குகின்றன. இன்று உலகெங்கும் பரவலாகப் பேசப்படுகின்ற ஆன்மீக ஆரோக்கியத்தைப் பேணி வளர்த்தெடுப்பதில் ஆலயங்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்று எனலாம்.

பல்லவர் காலத்தில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகிய கலைகளை வளர்த்தெடுப்பதில் ஆலயங்கள் மிக முக்கிய பங்களிப்பை நல்கின. இவ்வகையில் ஆலயங்களில் வடிவமைக்கப்படும் இரதத்தில் சிற்பக்கலையின் உன்னத பங்கினை நாம் அவதானிக்க முடிகிறது. இந்த ரதத்தை வடிவமைக்கும் சிற்பாசாரியின் கலைநுணுக்கத்தினை இதன்கண் நோக்கற்பாலது.

இத்தகைய கலையம்சத்தைத் தாங்கி இவ்எழில்மிகு சித்திரத்தேரில் இன்று எம்பெருமான் சித்திவிநாயகர் எழுந்தருளி வீதியுலா வருவது அடியவர்களுக்கெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது. வினை தீர்க்கும் விக்ன விநாயகனை வணங்கி அடியவர்கள் அவனருளைப் பெற அவன் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

''வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்''

**க.கணேஷ்,**
அரச அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ்.மாவட்டம்.

### இருப்பைமூலை சித்தி விநாயகருக்கு இன்று தேர் வெள்ளோட்டம்



இலங்கையின் பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்களில் ஒன்றாக மிளிர்வதும், பழம் பெருமை மிக்கதுமான ஆலயமாகத் திகழ்வது, பொலி கண்டி இருப்பைமூலைச் சித்தி விநாயகர் ஆலயம். எம்பெருமானின் சித்திரத்தேர் இன்று வெள் ளோட்டம் காணத் திருவருள் கைகூடியுள்ளது.

இந்துக்களின் வாழ்விலே பெறுதற்கரிய பெரும் பேறாயமைந்த தரிசனங்கள் மூன்று உள்ளன. அவை குலதெய்வக் கோயில் குட முழுக்குத் தரிசனம், கோபுரக் குட முழுக்குத் தரிசனம், சித்திரத் தேர் வெள்ளோட்டத் தரிசனம் என்பவையாகும். இவை நம் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் தேடிய தேட்டமாகும். எனவேதான் சித்திரத்தேர் வெள்ளோட்டம் என்பது முக்கியமானதொன்றாக அமைகின்றது.

பஞ்ச கிருத்தியங்களின் சங்காரத் தொழிலை உணர்த்தி நிற்பது தேர் உற்சவமாகும். மும்மல காரியமாக விளங்கும் முப்புரங்களை எம்பெருமான் தேரிலே கவர்ந்து வெற்றிபெற்ற வரலாறு இதன் அடிப்படைத் தத்துவமாக அமைகின்றது.

இத்தகைய அருட்தத்துவம் நிறைந்த சித்திரத் தேரிலே சித்தி விநாயகப் பெருமான் சித்திகள் தரச் சிறப்பாகப் பவனி வருகின்ற இந்நாளில் அடியவர்கள் அனைவரும் நல்லருள் பெற்று நலமாய் வாழ, வல்ல கணபதியருள்வார் என ஆசிகள் கூறி அமைகின்றேன்.

**பண்டிதர், சைவப் புலவர் பொன்.சுகந்தன்,**
சைவப் பிரசார அமைச்சர்,
(அகில இலங்கை சைவப் புலவர் சங்கம்).

### மஹோற்சவ பிரதமகுருவின் ஆசிச் செய்தி

தேரின் தோற்றத்தைக் காணும் எமக்கு, பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்கள் அதன் சக்கரங்களாகவும் நான்கு வேதங்கள் நான்கு குதிரைகளாகவும் முப்புரம் எரிக்கப் புறப்பட்ட பரம்பொருளின் அருட்செயலை உணர்த்தி நிற்கிறது. ''சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்'' என இறைவன் திருக்கரத்தேயுள்ள அக்கினிச் சுவாலையை ஒத்ததானத் தேர்த்திரு வடிவம் இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றாகிய சங்காரத்தை குறித்துக் காட்டுகிறது. '' சங்காரம்'' என்றால் ஒடுங்குதல் என்று பொருள்படும். அழித்தல் எனும் சங்காரமாக அமையும். அகி லமும் இறைவனாகிய ஜோதியுள் அடக்கம் என்ற தத்துவத்தை உணர்த்தும், ''ஊர் கூடி இழுத்தல்'' எனும் தேர்த்திருவிழாவை முன்னிட்டு பொலிகண்டி இருப்பைமூலை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான புதிதாக அமைக்கப்பெற்ற அழகிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும், புதிய சப்பர வெள்ளோட்ட நிகழ்வும் சர்வதாரி வருஷ ஆவணி 25ஆம் நாளாகிய (10.09.2008) இன்றைய சுபமுகூர்த்தத்திலே எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளால் மங்களகரமாக நிகழ்வுற இறைபதம் பணிந்து ஆசி கூறி அமைகின்றேன்.

ஆலய பிரதமகுரு:
**''வேதாகம கிரியா கலா பூஷணம்''**
**தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்,**
ஆசிரியர், யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

### ஆலய குருவின் ஆசிச் செய்தி

பொலிகண்டி இருப்பைமூலை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் நிகழும் சர்வதாரி வருஷ ஆவணி 25ஆம் நாளாகிய இன்று (10.09.2008) புதன்கிழமை நடைபெறுகின்ற புதிய சப்பரம் அழகிய விருத்த வடிவில் அமைந்த சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வுகள் இறையருள் பொருந்தி சுபமங்களகரமாக அமையவும் தேரினை நன்கு வடிவமைத்துத் தந்த ''சிற்ப வாருதி'' நாகரத்தினம் மகேந்திரன் அவர்களுக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து.

**சிவ ஸ்ரீ சோ.தீபதர்ஷனசர்மா, ஆலயகுரு.**

## அடியவர்களின் தொண்டினால் உயர்ந்து நிற்கும் ஆலயம்

பழம் பெருமை மிக்கதோர் ஆலயமாக பொலிகண்டி இருப்பைமூலை சித்தி விநாயகர் ஆலயம் விளங்குகின்றது. நூறு வருடங்களுக்கு முன்பு இக்கோயில் ஒரு மட லாலயமாகவே இருந்தது. வெண்கல்லினால்ஆன விக்கிரகம் ஒன்றே பூசிக்கப்பட்டு வந்தது. இவ்விக்கிரமானது தெய்வாதீனமாகக் கிடைத்தமை விநாயகப் பெருமானின் திரு வருளை எடுத்துக் காட்டுகின்றது. சமீபத்திலிருக்கும் பெரியதம்பிரான் ஆலய வீதியில் அம்மையார் ஒருவர் அழகிடற் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தபோது அழகாகச் செதுக்கப்பட்ட முடியொன்றினை ஒரு புற்றின் உச்சியில் கண்டார். அதன்பின் அவ்விடத்தை அகழ்ந்த போது விநாயகப் பெருமானின் விக்கிரகம் கிடைக்கப்பெற்றது.

அதன் பின்னர் 1917ஆம் ஆண்டளவில் மடாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, அடியவர்களின் அயராத தொண்டினால் ஆலயமாக்கப்பட்டது. அதன் பின்னர் விநாயகப் பெருமானின் திருவருளால் 1930 ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

இந்த ஆலயத்தில் பூசிக்கப்பட்ட விக்கிரகம் வெண்கல்லால் ஆன விக்கிரகமாதலால் பல வருடங்களாகச் செய்யப்பட்டு வந்த அபிஷேகங்களினால் அங்கங்கள் தேய்ந்து போயின. இதன் காரணமாக அங்கி ஒன்று இடப்பட்டிருந்தது. இதனை அடுத்து சைவப் பெரியாரான சிவபாத சுந்தரனார் அவர்கள் இவ் விக்கிரகம் இவ்வாறு பயன்படுத்துதல் தகாது என்றும் அதற்குப் பதிலாக கருங்கல் விக்கிரகம் விரைவில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டதனையடுத்து, அப் பெரியாரின் அறிவுறுத்தலுக்கு ஏதுவாக கருங்கல் விக்கிரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து பூசிக்கத் தொடங்கினர். அதன் பின்னர் அடியவர்களின் அயராத உழைப் பினால் ஆலயம் உயரத் தொடங்கியது. பல அன்பர்கள், கொடையாளிகள் முன்வந்து ஆலய வளர்ச்சிக்கு வித்திட்டனர். இவற்றில் சைவப்பெரியார் வே.நடராசா அவர்களின் பங்களிப்பு மகத்தானதொன்றாக அமைந்துள்ளது.

இக்கோயில் இன்று கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தர்சன மண்டபம், தம்பமண்டபம், வசந்தமண்டபம் முதலியவற்றுடன் முருகப் பெருமான் ஆலயம், சண்டேசுர நாயனார் ஆலயம் ஆகிய பரிவார ஆலயங்களும் பொருந்தியதாகக் காட்சியளிக்கின்றது. அத்தோடு, இன்று அடியவர்கள் பலரின் ஒத்துழைப்பால் சித்திரத்தேர், சித்திரச் சப்பரம் இன்று வெள்ளோட்டமும் காண்கிறது. இவை யாவற்றிற்குமான விநாயப் பெருமானின் திருவருளை எண்ணி புளகாங்கிதமடைகின்றோம். அனைத்தும் எம்பெருமான் அடியவர்களுக்கும் திருவருள் கிடைக்க வேண்டுமெனச் சித்திரத்தேரேறி வரும் சித்தி விநாயகனை வேண்டுகின்றோம்.

தேர் சிற்பாச்சாரியார், சிற்பவாருதி நாகரத்தினம் மகேந்திரம் அவர்களுக்கும் இதற்குச் சிறந்த முறையில் வர்ணம் பூசிக்கொடுத்த பொலிகையூர் யோகராசா குழுவினருக்கும் எம் பெருமானின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(78290)

**ஆலய பரிபாலன சபையினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# CCIY- வணிகக் கல்வி நிலையம் (வடமராட்சி)

# அங்குரார்ப்பணம் 10.09.2008

## எழுமின்

எழுமின்! விழிமின்! உழைமின்!
-எழுமின்
இமய உச்சி, விழுமிய நோக்கு,
கலையா சித்தம், மலையென ஓங்க
-எழுமின்
உழைப்பே உன் சீர், உறவே நாதம்,
தெளிந்த சிந்தை, ஓய்வுறாச் செயல்,
புதுயுக இலக்கணம், புதுப்புது உத்திகள்,
தாழ்விலா சக்தி, அகிலம் ஆளவே
-எழுமின்
தாமதியாதே, சோர்வடையாதே,
காலமோ சிறிது, கருமமோ பெரிது,
பாதையோ கடினம், பயம் கொள்ளாதே,
காரியம் சித்தி, வீறுடன் செல்வாய்
-எழுமின்
தர்மம் ஓங்கிடும், தயையும் பெருகிடும்,
கருணைக் கர்மம், நிகரில் வலிமை,
சிலையும் மெழுகாய், உலகெலாம் உருக்கிட,
கலையும் திருவும் என்றும் நடமிட
-எழுமின்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் தத் சத் ஓம் என்றே
-எழுமின்

-அருணாசலத்தான்.



## இவ்வரிய வாய்ப்பையும் இளைஞர்கள் பயன்படுத்த வேண்டும்

உலகமயமாதல் நிகழும் இன்றைய சூழல் எம் இளஞ்சிறார்களின் கல்வித்திறன் சர்வதேச தரத்திற்கு உயர வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதொன்றாகும். மிகவும் வேகமாக வளர்ந்து வரும் இன்றைய நவீன அறிவுலகத்தில் போட்டிபோட்டு தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்குக் கணனி அறிவும், ஆங்கில அறிவும் இன்றியமையாததாக அமைந்துள்ளது. இவ்வகையில் வடமராட்சி மாணவர்களுக்கு இவ்வறிவாற்றலை மேம்படுத்தும் நோக்கில் வாத்தக கைத்தொழில் மன்றத்தினால் இன்று (10.09.2008) புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள "வணிகக் கல்வி நிலையத்தின்" ஆரம்ப வைபவம் இதற்கு ஓர் நுழை வாயில் எனலாம். இவ்வரிய வாய்ப்பைச் செவ்வனே உபயோகப்படுத்தி சீர்பெறவேண்டியது எம் இளஞ்சமூகத்தின் தலையாய பணியாகும்.

"கற்க கசடற கற்றவை கற்ற பின்
நிற்க அதற்கு தக"

என்கின்றது வள்ளுவம். உலகப் பொதுமொழியாம் ஆங்கிலக் கல்வியுடன் கணனியையும் கற்பதனால் உள்ளங்கையில் உலகைக் கொணர்தல் சாத்தியமாகின்றது. "எட்டுத்திசையும் சென்று அறிவுச் செல்வம் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்றார் பாரதி. இன்றோ ஏழுலகமும் கணனித்திரையில் ஒலி, ஒளி வடிவில் உங்களுடன்.

யாழ்.மாவட்டத்தின் சமூக பொருளாதார, கலை, கலாசார மேம்பாட்டிற்கும், மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கும் ஆக்கபூர்வமான சிந்தனையுடனும், அர்ப்பணிப்புடனும் செயலாற்றும் துடிப்புள்ள இளஞ் சமூகத்தை "வணிகக் கல்வி நிலையம்" படைத்தளிக்கும் என்ற பெரும் நம்பிக்கையுடன் இவ்விழா சிறப்புறவும், கற்றல் செயற்பாடுகள் வளர்ச்சியுறவும் உளமார வாழ்த்துகிறேன்.

வாழ்க! வாழ்க!

**க.கணேஷ்,** அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

## வாழ்க வளர்க பல்லாண்டு

இருள் நிறை, குறை நிறை, துயர்
வரண்ட பாலை நெஞ்சங்கள்
புகல் இல்லா மக்கள் கூட்டம்
ஒளி இல், நோக்கு இல், வாழ்வு.

பாலையில் ஓர் சிறு ஊற்று
கல்வி நாட்ட, அகல் ஏற்றல்
செய்தார், கருணை மனக், கல்விச் செம்மல்
கால் கோள் காணும், வடமராட்சி

பல நூற்றாண்டுக் கல்விப் பாரம்பரியம்
ஒரு சில ஆண்டுகளில், ஒழிந்தது எல்லாம்
மறுபடி எழுவோம், எனக் கருணை வான் மழை
பெய்க! என்றே, முயலும் கல்விச் சான்றோர்.

உந்துநலால், உவந்தோர், ஒன்றினர்
புது யுக, எதிர் யுக, கால் கோள் கண்டனர்
இருள்கள் ஒழிக! அல்லல் ஒழிக! என்றே.
கரிமுகன், கரன், காக்கும் கடவுள், கழலினை ஏத்துவோம்

குவலயத்தின் விழி அனையாம், யாழ்ப்பாணத்தானை
ஏற்றிப் போற்றிய பாரதி, தந்த நற்சான்று
உரமாய், உயிராய், திடமாய், தீர்க்கமாய் பதித்து
பல்லாண்டு வாழ்க! வளர்க! என்றே, வாழ்த்துவோம்.

**க.மகாதேவசிவம்,**
*தலைவர், யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழிற்சபை.*

## பயனுள்ள பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும்

இன்றைய நவீன அறிவுலகமானது பரந்தும் விரிந்தும் ஆழமாகவும் மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் இயலுமையுள்ள மனிதர்களை உருவாக்க வேண்டிய தேவை வலுப்பெற்று வருகின்றது. உலக தொழிற்சந்தையுடன் போட்டிபோட்டு தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்குக் கணனியறிவும் ஆங்கில அறிவும் இன்றியமையாததாக அமைந்துள்ளது. எனவே கணனி அறிவையும் ஆங்கில அறிவையும் வடமராட்சி மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் முகமாக "CCIY வணிகக் கல்வி நிலையம்" ஆனது வடமராட்சி கல்வி வலயத்தின் அனுசரணையுடன் பயனுள்ள பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப்பயிற்சி நெறிகளின் இறுதியிலே குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தை அடைந்த மாணவர்களுக்கு வலயக் கல்விப் பணிமனையினூடாகச் சான்றிதழ் வழங்கப்படும். தற்காலச் சூழலில் பயிற்சி நெறிகளுக்காக வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்று கற்பதென்பது பணச்செலவும் நேர விரயமுமுள்ள விடயமாக மாறியுள்ளது. இதையுணர்ந்த Chamber of Commerce and Industries of Yarlpanam (CCIY) என்ற நிறுவனம் வடமராட்சி மாணவர்களுக்கு இந்தக் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தும் செயலானதும், கணனி வகுப்புக்களுக்குத் தேவையான கணனிகளில் பலவற்றை அன்பளிப்புச் செய்த ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் தேவஸ்தான நிர்வாகத்தினது செயலானதும் வடமராட்சிக் கல்விச் சமூகத்தினால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகின்றன.

இக்கற்றை நெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள் குறித்த துறையில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்து பயன்பெற வேண்டுமெனவும் பலரின் கூட்டு உழைப்புடன் செயற்பட இருக்கின்ற CCIY நிறுவனத்தினரின் பணி [illegible] மாகவும் சிறப்பானதாகவும் அமைந்து கல்விச் சமூகத்தினருக்குப் பயன் கொடுக்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

**சி.தியாகராசா,**
செயற்றிட்டப் பணிப்பாளர், CCIY வணிக கல்வி நிலையம், வடமராட்சி.

## கற்றலுக்கான கற்றல்

பாடசாலை விட்டு விலகிய மாணவர்களுக்கு ஆங்கில அறிவு, கணனி அறிவு என்பவற்றைப் போதிப்பதற்கு CCIY BUSINESS SCHOOL என்னும் நிறுவனம் வடமராட்சியில் ஆரம்பிப்பது மகிழ்ச்சியாக உள்ளது. பரீட்சைக்குத் தோற்றியோரும், பாடசாலையை விட்டு விலகியோரும் இடைக்காலத்தில் செய்வதறியாது இருக்கும் நிலையில் இந் நிறுவனத்திற் சேர்ந்து இக்கற்கை நெறிகளைக் கற்பதால் காலம் பயன்படுத்தப்படுவதுடன் அறிவும் விருத்தியாகும். நவீன கல்விச் சிந்தனையில் கற்றலுக்கான கற்றல் என்னும் தேர்ச்சி இந் நிறுவனத்தினூடே அடையலாம். இதனைப் பொறுப்பேற்று நடத்தும் ஓய்வு பெற்ற கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர். திரு.எஸ். தியாகராஜா மாணவர்களை சிறந்த முறையில் நெறிப்படுத்துவார். வடமராட்சி மாணவர்களுக்கு இந்நிறுவனம் கல்விநெறிகளை நடத்துவது ஒருவரப்பிரசாதமாகும். இந்நிறுவனம் மேன்மேலும் கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துகள்

வே.தி.செல்வரத்தினம், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், யாழ். மாவட்டம்.

## இருக்கும் இடத்தில் அறிவைப் பெறும் வாய்ப்பு

வடமராட்சி மாணவர்களின் நலன் கருதி CCIY BUSINESS SCHOOL பருத்தித்துறையில் 10.09.2008 அன்று ஆரம்பிக்கப் போவதாக அறிந்தோம்.

மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வரும் வரைக்கும் காலத்தை நன்கு பயன்படுத்தவும் மேலும் வேறு இடங் களுக்குச் சென்று இந்த அறிவைப் பெற அலைக்கழியாமல் இருக்கும் இடத்தில் பெற வாய்ப்பு வந்தமை நமக்கு ஒரு வரப்பிரசாதம். இதனை நன்கு பயன்படுத்த வேண்டும் என்பது அடியேனது அவா. இவர்களின் முயற்சி வெற்றியடைய அன்னையிடம் மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னையின் அடியவன்
**சித்ரூபானந்தா.**

## வலயக்கல்விப் பணிப்பாளர் வாழ்த்துரை

காலத்தின் தேவையறிந்து CCIY வர்த்தகப் பாடசாலையால் வடமராட்சி மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படும் கல்வி நிறுவனத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் கற்கை நெறிகள், தகவல் தொழில் நுட்பம் சார் கற்கைநெறிகள் இந் நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளன. இந்நிறுவனத்தால் எமது மாணவர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

வ.செல்வராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.

**ஊர் கூடித் தேர் இழுத்தல் — சமூகத் தேவைகளைச் சமூகமே செய்தல் வேண்டும்**


## வாழ்வகம்

(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்)

### வாழ்வக நிறுவுநர் நினைவு நாளும் நூல் வெளியீடும் - 2008

இடம் : வாழ்வகம்
காலம் : நாளை (11.09.2008) வியாழக்கிழமை
நேரம் : காலை 8.30 மணி
தலைமை : திரு.ஆ.ரவீந்திரன் (தலைவர், வாழ்வகம்)
பிரதம அதிதி : உயர்திரு.கே.கணேஷ் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
சிறப்பு அதிதி : திருமதி எஸ்.மஞ்சுளாதேவி (பிரதேச செயலர், உடுவில்)

வெளியீட்டுரையும் நூல்வெளியீடும்:
பேராசிரியர் திரு.கா.குகபாலன்
(தலைவர், புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நிறுவுநர் நினைவுப் பேருரை:
கலாநிதி T.கலாமணி
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

வாழ்வக சமூகம்.


### கணவனுக்கும் மனைவிக்கும் எரிகாயங்கள்

யாழ்ப்பாணம், செப்.10

மேசை மீது வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கு சரிந்து விழுந்து படுக்கை தீப் பற்றிக் கொண்டதில் குடும்பப் பெண்ணும் அவரைக் காப்பாற்ற முயன்ற அவரது கணவனும் எரிகாயங்களுக்கு இலக்கானார்கள்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமைநுணாவில்மேற்கில்இடம்பெற்றது.

மகான் தவமணி (வயது 44) என்பவரும் இவரது கணவரான வேலன் மகான் (வயது 44) என்பவரும் எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு [illegible] போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (203-207)


## திருமண நல்வாழ்த்துகள்

இன்று (10.09.2008) புதன்கிழமை கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கல்யாண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையும்

கேதீஸ்வரன் — தனலக்ஷ்மி




ரெலிகொம் நண்பர்கள்:
[illegible], சி.டிக்கின்ஸ், ரி.சுரேஸ்குமார், எம்.துரைசிங்கம், கே.அன்பழகன்,பி.கேசவநாதன், ஆர்.ர[illegible]ந்திரன், எம்.ரமேஸ்குமார், எஸ்.சந்திரலிங்கம், ஆர்.ராமச்சந்திரன், கே.மன்மதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணாத்துப் பூச்சியின் விசித்திர வாழ்க்கை

வண்ணத்துப் பூச்சிக்கு ஒரு வாழ்க்கை வட்டம் உண்டு. முதலில் அது ஒரு முட்டை. பிறகு அது ஒரு கம்பளிப் பூச்சியாகின்றது. பின்னர் கூட்டுப்புழு, இறுதியில் வண்ணத்துப்பூச்சியாக வெளிவருகின்றது. இந்த வாழ்க்கை வட்டத்தில் ஒரே ஒரு கட்டத்தில்தான் அது நன்றாக உணவு உட்கொள்கின்றது. சில வகை வண்ணத்துப் பூச்சிகள் கம்பளிப் பூச்சியாக இருக்கும் பருவத்தில் மட்டுமே உணவு எடுத்துக்கொள்கின்றன. இந்தக் கால கட்டத்தில் அது நன்றாக சாப்பிட்டு வளரும். தன்னை மூடியிருக்கும் கம்பளி போன்ற தோல் வெடித்துக் கழன்று வேறு ஒன்று தோன்றும் வரை சாப்பிடும் வேலை தொடரும். இது மீண்டும்மீண்டும் நடைபெற்று சில வாரங்களில், பிறந்தபோது இருந்ததை விட பல மடங்கு பெரிதாகி விடும். சில வாரங்களில் சிறகுகள் முளைத்து வண்ணத் துப்பூச்சியாகப் பறக்கத் தொடங்கும்.

வண்ணத்துப் பூச்சிகளால் உணவு உட்கொள்ள முடியும். அதற்கு ஒரு தலை, மார்புக்கூடு மற்றும் வயிறு முதலியவை உண்டு. சாப்பிடக்கூடிய வண்ணத்துப் பூச்சிகளுக்கு ஏனைய பூச்சிகளுக்கு இருப்பது போல் வாய் அமைந்திருப்பதில்லை. அது ஒரு குழாய் போல் தான் இருக்கும். பயன்படுத்தாத வேளைகளில் அக் குழாய் சுருண்ட நிலையில் இருக்கும். பூக்களின் உள்ளே இக்குழாயை செலுத்தி தேனைப்பருக இக்குழாய் அதற்கு உதவுகின்றது.

ரங்கன்.

# வடையோடு கடை வந்தது

கப்பலில் வருகின்ற
பொருள்கள் யாவும்
கடை எங்கும்
விற்பனை யாகின்றன.

எப்படி விலையென்று
எடுத் தொன்றை
பார்த் திட்டால்
குப்பென்று தலைசுற்றுது.

பழசெல்லாம் புதிசாக
படைக் கின்றார்
விலை யென்றால்
தினந் தோறும் உயர்கின்றது.

தெருவோரம் நடைபாதை
இருக்கின்ற
படியாலே
வடையோடு கடைவந்தது.

தடை போட அதிகாரி
நினைத்தாலும்
இடையாலே
நுழைகின்றார் என் செய்வது?

- ரமணி -

## நம்பிக்கை!

இப்போது என்னை
ஒதுக்கிவைத்தவர்கள்
ஏற்கனவே - என்னோடு
கூட இருந்தவர்கள்..........
இப்போது என் கூட இருப்பவர்கள்
ஏற்கனவே - என்னை
ஒதுக்கிவைத்தவர்கள்.......
என்னை எப்போது - இவர்கள்
ஒதுக்கி வைப்பார்களோ......?
அவர்கள் என்னோடு -
கூட இருப்பதற்கு..........?

வி.முகிலன், நெடுந்தீவு - 13.

# கடலுக்குள் சுவாசிக்க முடியாத கடல்வாழ் பசு

உலகின் மிகப் பெரிய உயிரினம் திமிங்கிலம். அதை நாம் அனைவரும் அறிந்ததே. எமது கடலிற்கே உரிய மிகப்பெரிய உயிரினம் கடற்பசு.

'டூகோங்' என்ற விஞ்ஞானப் பெயர் கொண்டு அழைக்கப்படும் ஆவுளியா அல்லது கடற்பசு உலகின் மிக அரிதான உயிரினம். பாக்கு நீரிணைக் கடலிலும் மன்னார் வளைகுடாக் கடலிலுமே இவை வாழ்கின்றன. அமெரிக்காவின் வாய்த்தீவுக்



கடலில் மிக அரிதாக இவை வாழ்கின்றன.

இதன் ஆகக்கூடிய நீளம் 3 மீற்றர். ஆகக் கூடிய நிறை 400 கிலோக்கிராம்.

இதற்குக் கடற்பசு எனப் பெயர் வரக்காரணம் என்ன தெரியுமா?

இந்த உயிரினம் கடலில் உள்ள புற்கள், கடற் தாவரங்கள் என்பவற்றையே உண்டு உயிர்வாழ்கின்றன. பசு மாதிரி சாதுவான, ஆபத்தை ஏற்படுத்தாத பிராணி இது. இதனால்தான் இது கடற்பசு என அழைக்கப்படுகின்றது.

இது ஒரு தாவர உண்ணி என்பதால் பவளப் பாறைகள், தாவரங்கள் நிறைந்த மன்னார், பாக்குநீரிணைக் கடலில் வாழ்கின்றது. கடற்பசுவால் தொடர்ந்தும்கடலுக்குள் சுவாசிக்க முடியாது. இதனால் குறிப்பிட்ட நிமிடங்களுக்கு ஒரு தடவை கடலின் மேல் மட்டத்துக்கு வந்து சுவாசிக்கும்.

கண் பார்வையில் கூர்மை கிடையாது. ஆனால் கேட்டல் திறன் மிகவும் துல்லியம். ஆகக் கூடிய வாழ்நாள் காலம் 70 ஆண்டுகள். கர்ப்பகாலம் 15 மாதங்கள்.

குப்பிளான் -சந்தோசன்-

# புதன் பொய்கை

# சொக்லேட்



உலகில் உள்ள அனைவருக்கும், குறிப்பாகக் குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமான தின்பண்டங்களுள் சொக்லேட்டும் ஒன்றாகும். கிறிஸ்ரோபர் கொலம்பஸ் 16 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அப்போது அங்கு வாழ்ந்து வந்த மக்கள் சொக்லேட்களைப் பயன்படுத்தி வந்ததைக் கண்டு பின்னர் ஸ்பெயின் நாட்டுக்கு அதனை அறிமுகப்படுத்தியதாக ஏற்கனவே நாம் புதன் பொய்கையில் பார்த்திருக்கின்றோம்.

பழைய பதிவேடுகளின்படி சொக்லேட் கி.பி. 1350 ஆம் ஆண்டுகளில் தென் ஆபிரிக்காவில் பயன்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அங்கு வாழ்ந்து வந்த மக்கள் சொக்லேட்டை கோகா மரங்களில் இருந்து பெற்றனர். பின்னர் ஸ்பெயின் நாட்டிலும் இத்திரவப் பொருள் ஓர் உணவாகப் பரவியது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் இது ஸ்பெயினில் மட்டுமே புழக்கத்தில் இருந்து வந்தது. பிரான்ஸ் நாட்டில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் சொக்லேட் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அவர்கள் அதனை அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்ளவில்லை. உணவுத்துறை வல்லுநர்கள் சோதனை செய்து, உடல் நலத்திற்குத் தீங்கு ஏதும் விளைவிக்காது என்று சான்றளித்த பின்னரே பிரெஞ்சு அரசு 1650 இல் இதனை பொதுமக்கள் அருந்துவதற்கான ஒரு பானமாக ஏற்றுக் கொண்டது. பின்னர் 1657 இல் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒருவர் லண்டனிலும், ஐரோப்பாவின் பிற நகரங்களிலும் சொக்லேட் பானம் விற்கும் கடைகளைத் தொடங்கினார்.

அப்போது இது பணக்காரர்களின் பானமாகக் கருதப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சொக்லேட்டை, பால் மற்றும் சர்க்கரையுடன் கலந்து குளிர்பானமாக அறிமுகப்படுத்தினார். பின்னர் கெய்லர் என்ற ஸ்வீடிஷ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சொக்லேட்டைத் துண்டுகளாகவும், கட்டிகளாகவும் திட வடிவத்தில் உருவாக்கினார். இதற்கிடையில் காட்பரி சகோதரர்கள் எனப்பட்ட புரோஜான் மற்றும் பெஞ்சமின் என்ற இருவரும் பல்வகை வடிவங்களில், பல்வகை மூலப்பொருள்களைக் கொண்டு பல்வேறு வகையான சொக்லேட்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். கோஹன்ரிட் ஜே.வான் ஹட்டன் என்ற டச்சு நாட்டு வேதியியல் அறிஞர் 1860 ஆம் ஆண்டில் சொக்லேட் திரவத்தை, சொக்லேட் தூளாக மாற்றக்கூடிய தொழில்நுட்பச் செயல்முறையைக் கண்டுபிடித்தார். இக்கோட்பாட்டின் அடிப்படையில் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த டேனியல் பீட்டர் என்பவர் பால் சொக்லேட்டைத் தயாரிக்கத் தொடங்கினார். இரண்டாம் உலகப்போரின் போது போர் வீரர்கள் உண்பதற்கென்று பலவகைச் சொக்லேட்கள் தயாரிக்கப்பட்டன. தற்போது எல்லா நாடுகளிலும் வகை வகையான சொக்லேட்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சொக்லேட் தயாரிப்பு நிறுவனமும் தமது தயாரிப்பே சுவையிலும், ஊட்டத்திலும் சிறந்தது என விளம்பரப் படுத்துகின்றது.

- தீபனா

# அணுசக்தி முயற்சி நடந்தது ஆனால்...

ஜேர்மன் விஞ்ஞானிகள்தாம் முதன்முதலில் அணுகுண்டைத் தயாரிக்கத் தொடங்கியவர்கள். அவர்களது ஆராய்ச்சிப் பணிக்கு 'யுரேனியம் திட்டம்' எனும் குறியீட்டுப் பெயர் இடப்பட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன்னதாகவே அணு ஆயுதத்தை உருவாக்குவதற்கு அவசியமான எல்லா முன் தேவைகளையும் ஜேர்மனி பெற்றிருந்தது. தேவையான தொழிற்துறை ஆற்றலும், நிதிவளங்களும், அணு பௌதிகத்தில் போதுமான ஞானமும் அதனிடம் இருந்தன. ஹாஹன், ஹெய்சன் பெர்க் போன்ற உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் அச்சமயம் ஜேர்மனியில் இருந்தனர். அப்படியெல்லாம் இருந்தும் அணு ஆயுதங்களைப் பெறுவதற்கு நாஜி ஜேர்மனி தவறி விட்டதே! ஏன்?

ஹிட்லரிடம் அணு ஆயுதங்களைத் தருவதற்கு ஜேர்மன் விஞ்ஞானிகள் விரும்ப வில்லை என்று சில ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். உதாரணமாக, 'ஆயிரம் சூரியன்களை விட பிரகாசமானது' எனும் தமது நூலில் 'யுங்க்' இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தியுள்ளார். ஹெய்சன் பெர்க், வெய்ஸ் சாக்கர், ஹௌட்டர் மான்ஸ் மற்றும் பல பிரபல பௌதிக நிபுணர்கள் தங்களது ஆராய்ச்சிகளைக் காலம் தாழ்த்தினர், அவற்றின் முடிவுகளை மூடி மறைத்தனர் என்று கருதுகிறார். 'யுரேனியத்திட்டம்' முன்வைத்த பணியில் பெரும் சிரமங்களை நாஜி ஜேர்மனியின் இராணுவத் தலைவர்களும், பொருளாதாரத் தலைவர்களும், அதேபோல் அணுசக்தி விஞ்ஞானிகளும் பூரணமாகப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டனர் என்பதை ஏராளமான விவரங்கள் காட்டுகின்றன. ஓர் உறுதியான விஞ்ஞான அடித்தளமின்றி மிகக் குறைந்த ஊழியர்களை வைத்துக்கொண்டு நம்புதற்கரிய மிகக்குறைந்த காலத்திற்குள் அணு ஆயுதத்தை உருவாக்க அவர்கள் முயற்சி செய்தனர். இந்த அசட்டுத் துணிச்சலும் அவசரமும், விஞ்ஞானத்தில் ஒத்து வருமா!

இவைதான் ஜேர்மன் ஆராய்ச்சிப் பணிக்கு இடையூறாக இருந்த உள்நாட்டுக் காரணங்களாகும். எனினும் 1943ஆம் ஆண்டிலேயே புதிய வெளிநாட்டு அம்சங்கள் செயற்படத் தொடங்கிவிட்டன. நோர்வேஜிய கொரில்லா இயக்கத்தினர் தொடுத்த தாக்குதல்கள் கன நீர் கிடைக்கக் கூடிய ஒரே ஆதாரத்தை செயலற்றுப் போகச் செய்துவிட்டன. 'யுரேனியம்' திட்டங்களை நிறைவேற்றி வந்த ஆலைகள் கடுமையான விமானக்குண்டு வீச்சுகளுக்கு இலக்காயின.

1944இல் ஜேர்மன் விஞ்ஞானிகள் தமது அணு உலையைக் கட்டுவதற்குத் தயாராக இருந்தனர். ஆனால் சோவியத் இராணுவத்தின் முன்னேற்றம் இந்தப் பணியைக் குலைத்து விட்டது.

யுரேனியம், கனநீர் இருப்புகளும், அணு உலைகளுக்கான எந்திர சாதனங்களும் தெற்குப்பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டன. ஆய்வுக்கூட ஊழியர்களும் இந்த இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஜேர்மன் பௌதிக விஞ்ஞானிகள் மலைகளுக்குக் கீழே பூமிக்கு அடியில் ஓர் அணு உலையை மீண்டும் கட்டத் தொடங்கினர். ஆனால், பெர்லினை நோக்கி சோவியத் படைகளின் முன்னேற்றமும், இதன் விளைவாய் நாஜி ஜேர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதியும், 'யுரேனியத் திட்டத்திற்கு' அதாவது அணுகுண்டுப் படைப் பிற்கு முற்றுப்புள்ளி வைத்தன.

# எழுதும் விதங்கள் வேறு!

ஒவ்வொரு மொழிகளிலும் எழுத்துக்கள் விதம் விதமாக அமைந்திருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. பல மொழிகள் பல விதங்களில் எழுதப்படுகின்றமையையும் பார்ப்போம்.

கிரேக்கர்கள் முதல் வரியை வலமிருந்து இடமாகவும் இரண்டாவது வரியை இடமிருந்து வலமாகவும் மூன்றாவது வரியை மறுபடி வலமிருந்து இடமாகவும் எழுதுவார்கள். இப்படியே அடுத்தடுத்து வலம், இடமாக வரிகளை மாற்றி மாற்றி எழுதுவார்கள். சீனர்கள் மேலிருந்து கீழாகவும் வலப்புறத்திலிருந்து இடப்புறமாகவும் எழுதுவார்கள்.ஜப்பானியர் மேலிருந்து கீழாகவும் இடப்புறத்திலிருந்து வலப்புறமாகவும் எழுதுவர்.மெக்ஸிக்கர்கள் கீழிருந்து மேலாக எழுதுவார்கள். துருக்கி, பாரசீகம் ஆகிய மொழிகளில் வலப்பக்கத்தில் இருந்து இடப்புறமாக எழுதுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகபாலா அபாரமாக வீசி 7 விக்கெட்டுக்களை சாய்த்தார்

## சென்.பற்றிக்ஸுக்கு இலகுவான வெற்றி கிட்டியது


குகபாலா

வலி.வடக்கு, செப்.10

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் வீரர் குகபாலா அபாரமாகப் பந்து வீசி ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்துத் தனது அணியின் வெற்றிக்கு உதவினார்.

இலங்கை பாடசாலை சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவுக்கு நடத்தப்பட்டுவரும் ''சுப்ப சிக்ஸ்'' சுற்றில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆறு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி 35.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

திவாகர் 29 பந்துக்ளில் மூன்று நான்குகளுடன் 20, அருள்ராஜ் 49 பந்துகளில் 10 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 09 ஓட்டங்களும் பெறப்பட்டன.

குகபாலா 8.4 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 07 விக்கெட்டுக்களையும் நிலக்சன் 06 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் தேவானந்தன் 02 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் நோபேட் 05 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

மிகவும் குறைந்த ஓட்ட எண்ணிக்கையான 64 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 18 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

நிலக்சன் 12 பந்துகளில் இரண்டு நான்குகளுடன் 14, ரியூடர் 48 பந்துகளில் ஒரு நான்குடன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

நிதாசன் 03 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அருள்ராஜ் 02 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (86)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு, செப்.10

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

* அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
* அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் சித்தங்கேணி ஸ்ரீ கனேசா வித்தியாலயம்.
* வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி எதிர் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.

**16 வயதுப் பிரிவு**

* வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
* அராலி இந்துக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை எதிர் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.

* மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

* அராலி இந்துக் கல்லூரி எதிர் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் பண்ணாகம் மெய் கண்டான் ம.வி. (1-86)



நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபைப் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் முன்பள்ளிச் சிறுவர்கள் போட்டிகளில் ஈடுபட்டிருப்பதை முதலிரு படங்களிலும், விநோத உடைப் போட்டியில் ஒளவைப்பாட்டியாக வந்து முதலாம் இடத்தைப் பெற்ற செல்வி அக்ஷயா செல்வநாயகம் மத்தியஸ்தர்களுடன் உரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

## யாழ்.ப.நோ.கூ.சங்க அணி ஆறுவிக்கெட்டுகளால் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.10

யாழ். அஞ்சல் திணைக்களம் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் யாழ்.ப.நோ.கூ. சங்க அணி வெற்றியீட்டியது.

யாழ். அஞ்சல் அலுவலகம் திணைக்களங்களுக்கிடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் 16 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை அரியாலை ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

அன்று நடந்த ஆட்டம் ஒன்றில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வி.க. அணியும் யாழ். செலிங்கோ காப்புறுதி நிறுவனமும் மோதின.

யாழ். ப. நோ. கூ. சங்க வி.க. அணி ஆறு விக்கெட்டுக்களாலும் 7 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. இதில் செ.டேமியன் 44 ஓட்டங்களையும் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (1- 224)

# விறுவிறுப்பான ஆட்டமொன்றில் கொக்குவிலை வென்று அசத்தியது யூனியன்

## இறுதிப்போட்டிக்கும் தகுதிபெற்றது

வலி.வடக்கு,செப்.10

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கான 'சுப்ப சிக்ஸ்' சுற்றில் ஆட்டமொன்றில தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 27 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் யூனியன் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 48.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இராகுலன் 82 பந்துகளில் ஆறு நான்குகளுடன் 63, துவாரகன் 75 பந்துகளில் 24, பானுஜன் 50 பந்துகளில் 19, சுலஜன், அகீசன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 28 ஓட்டங்களும் பெறப்பட்டன.

தனுசன் 04 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சதுர்சன் 9.4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் தாருஜன் 09 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்ட மற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் சன்சுஜன் 06 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சிவரூபன் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

174 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 43.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.


இராகுலன்

தனுசன் 68 பந்துகளில் ஒரு ஆறு, மூன்று நான்குகளுடன் 36, புவிராஜ் 41 பந்துகளில் இரண்டு நான்குகளுடன் 24 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 49 ஓட்டங்களும் பெறப்பட்டன.

இராகுலன் 08 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டும் சிலோஜன் 08 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டும் சிந்தாகரன் 06 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் ஜோய் கிறேசியன் 06 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பானுசன் 05 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் அகீசன் 2.2 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்ட மற்ற ஓவருடன் 04 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# சென். றோக்ஸ் சுற்றுப் போட்டியில் பல்கலையை வென்றது சென். அன்ரனீஸ்

குருநகர், செப்.10

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 3-0 என்ற கோலால் யாழ். பல்கலைக்கழக அணியை வெற்றியீட்டியது.

இந்த இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பல நூற்றுக் கணக்கான விளையாட்டு ரசிகர்கள் மத்தியில் நடைபெற்றது.

இப் போட்டியின் ஆரம்பம் தொடக்கம் முதற் பாதி வேளை வரை இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் விளையாடியதால் முதல் பாதி இடைவேளையின் போது இரு அணிகளாலும் எதுவித கோல்களும் போட முடியவில்லை.

இடைவேளைவிட்டு மறுபாதி வேளை ஆட்டம் தொடங்கிய பின்னர் பாஷையூர் முன்னணி வீரர்கள் விறுவிறுப்பாக அடி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விடாமல் மின்னல் வேகத்தில் அடுத்தடுத்து மூன்று கோல்களைப்போட்டு வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

இந்த இறுதிப் போட்டிக்கு பிரதம மத்தியஸ்தராக அஜித் கடமையாற்றினார். (1-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித நேயப் பணிகளுக்கும் ஆப்பு வைக்கும் அராஜகம்!

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த மாதிரி' வன்னி மக்களைத் துவைத்தெடுக்கத் தயாராகிவிட்டது போலும் மஹிந்த அரசு.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும மக்களை அங்கிருந்து உடன் வெளியேறி விடவேண்டும் என்று அறிவித்ததன் மூலம் அண்மையில் அவர்களுக்கு 'அச்சுறுத்தல் வைத்தியம்' செய்ய முயன்றது அரசுத் தரப்பு.

அந்த எத்தனம் அதிகம் எடுபடவில்லை. அந்த மக்கள் தங்களது தாயக மண்ணை விட்டு வெளியேற முன்வரவில்லை. அரசு எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு வெளியேறவில்லை.

இதனால் ஆட்சிப்பீடம் ஆத்திரமடைந்திருக்கின்றது போலும். அதனால்தான் 'அச்சுறுத்தல் வைத்தியம்' சரிவராத நிலையில் அடுத்து 'அதிர்ச்சி வைத்தியம்' என்ற காயை அது கையில் எடுத்திருக்கின்றது.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து சகல உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகளையும், அவற்றின் பிரதிநிதிகளையும் உடன் வெளியேறி விடுமாறு அரசு விடுத்திருக்கும் அறிவிப்பே இந்த 'அதிர்ச்சி வைத்திய' முயற்சிதான்.

தமிழரின் வன்னித் தாயகம் மீது கொழும்பு அரசு தொடுத்திருக்கும் கொடூரப் போர் காரணமாக அங்கு மிகப் பாரிய மனிதப் பேரவலம் நிகழ்ந்திருக்கின்றது. சுமார் இரண்டு லட்சம் மக்கள் தத்தமது வீடு வாசல்கள், நிலபுலன்கள், சொத்துகள், உடைமைகள், கால்நடைகள் போன்றவற்றை இழந்து கையில் அகப்பட்ட பொருள்களோடு ஏதிலிகளாக அலையும் துர்ப்பாக்கியம் நேர்ந்திருக்கிறது. மழைக்கும், வெயிலுக்கும் ஒதுங்க இடமின்றி, காடுகளிலும், மர நிழல்களிலும், தற்காலிகக் கொட்டகைகளிலும் படுத்துறங்கும் பேரவலத்துக்கு அவர்கள் முகம் கொடுக்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இலங்கை அரசு மூர்க்கமாக முன்னெடுத்து வரும் படை நடவடிக்கைகள் காரணமாக மேலும் புதிதாக ஏதிலிகள் பட்டியலில் ஆயிரக்கணக்கானோர் தினசரி சேர்ந்துவரும் நிலையிலேயே -

அதனால் நேர்ந்துள்ள மனிதப் பேரவல நிலையை ஓரளவேனும் சமாளித்து, அந்த அகதிகளின் அவசர - அவசிய - தேவைகளை விரைந்து கவனிக்கும் மனிதநேயப் பணியாளர்களின் சேவைக்கும் நிரந்தர வேட்டு வைத்திருக்கின்றது கொழும்பு அதிகார வர்க்கம்.

வன்னியில் அல்லலுறும் மக்களுக்கு சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற தொண்டுப் பணியாளர்களின் உதவி உச்சமாகத் தேவைப்படும் சமயத்திலேயே அச் சேவையை முற்றாகத் தடைசெய்யும் கொடுமையை முன்னெடுத்திருக்கின்றது கொழும்பு.

யுத்தத்தின் இடையில் சிக்கும் மக்களுக்கு உரிய மனிதாபிமான உதவிகள் கிட்டுவதை உறுதிப்படுத்துவது யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் பொறுப்பாகும். அந்த மனிதாபிமான உதவிகள் அந்த மக்களுக்குக் கிடைக்க விடாமல் தடுப்பது அடிப்படை மனித உரிமைகளையும் சர்வதேச யுத்த விதிகளையும் மீறும் செயற்பாடாகும்.

அதுவும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஒன்பதாவது அமர்வு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருக்கும் சமயத்தில், இவ்வாறு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முக்கிய மனிதாபிமானப் பணியைத் தடுத்து நிறுத்தும் அத்துமீறலை அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் கொழும்பு நிர்வாகம் முன்னெடுத்திருக்கின்றமை அதிர்ச்சி தருவதாகும்.

ஒருவகையில் பார்த்தால் இந்த 'செருக்குப் போக்கு' ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் செயற்பாட்டிற்கே சவால்விடும் நடவடிக்கை என்பதும் கவனிக்கத்தக்கது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை முற்றாகக் கைப்பற்றும் போர்வெறித் தீவிரத்தில் இருக்கும் கொழும்பு, அந்த இலக்கை அடைவதற்காகத் தனது படை நடவடிக்கைகளை மூர்க்கத்தனமாக ஆரம்பித்திருக்கின்றது. ஷெல், பீரங்கி, மோட்டார் தாக்குதல்களும், விமானக்குண்டு வீச்சுகளும் கண்மூடித்தனமாக நடக்கின்றன. குடிமனைகள் இலக்கு வைக்கப்படுகின்றன. அரசுப் படைகளின் யுத்த சந்நதம் இன்னும் தீவிரமடையும்போது இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல்கள் கேட்டுக் கேள்வியற்ற அளவில் பரந்து - விசாலமாக - மூர்க்கத்தனமாக - முன்னெடுக்கப்படலாம் என்ற பீதி தமிழர்கள் தரப்பில் உண்டு.

இந்தப் பின்புலத்திலேயே -

அப்பிரதேசங்களில் இருக்கும் உள்ளூர், வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகளையும் அவர்களது பிரதிநிதிகளையும் அத்தரப்பினருக்கு உரிய பாதுகாப்பைத் தங்களால் உறுதிப்படுத்த முடியாது என்று கையை விரித்து, அதன் காரணமாக அத்தரப்புகளை அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறுமாறு அரசுத் தரப்பு உத்தரவிட்டிருக்கின்றது.

சர்வதேசத்துடன் நம்பகரமான தொடர்பாடல்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்களைக் கொண்ட தொண்டர் நிறுவனங்களை வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவது, யுத்தத்தின் பெயரால் அப்பிரதேசம் மீது கட்டவிழப்போகும் கண்மூடித்தனமான - இலக்கற்ற - பேரழிவு நாசத் தாக்குதல்கள் பற்றிய விவரங்கள் வெளிப்பட இடமளிக்காமல் மூடிமறைக்கும் முஸ்தீபாகவும் இருக்கலாம் என்ற அச்சம் தமிழர்களுக்கு உண்டு.

வன்னியில் உள்ள அப்பாவி மக்களின் நலனிலும் பாதுகாப்பிலும் கூடத் தனக்குத் தார்மீகப் பொறுப்பும், கடமையும் உண்டு என சர்வதேசம் கருதுமானால், அதை நிறைவு செய்வதற்கான முக்கியமான தருணம் இப்போது அதற்கு வந்துவிட்டது என்பதே இப்போதைய யதார்த்த நிலைமை.

தற்சமயம் வன்னியைப் பேரழிவுக்குள்ளாக்கி, ரணகளமாக்கத் திட்டமிட்டு செயற்படும் கொழும்பை, அந்தக் கொடூரத்தை தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்க விடாமல் தடுப்பதன் மூலம் தனது கடமையை சரிவர ஆற்ற சர்வதேசம் முன்வர வேண்டும்.

## நெடுந்தீவு மீனவரின் கடலுணவுகளைப் பாதுகாப்பதற்கு வசதியாக
# கடற்றொழில் சமாசத்தின் 'கூலர்' படகினை புனரமைக்க 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.10

நெடுந்தீவு பிரதேச மீனவர்களின் கடலுணவுகளை பழுதடையாது பாதுகாப்பதற்கு வசதியாக பிரதேச கடற்றொழில் சமாசத்தின் கூலர் படகினை புனரமைப்பதற்கென சிறுவர் பாதுகாப்பு நிதியம் 25 லட்சம் ரூபா நிதியுதவி செய்துள்ளது.

சமாசத்தின் தலைவர் ப.யேசுதாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச கடற்றொழிலாளர்களின் வசதி கருதி மேற்படி நிறுவனம் 'கூலர்' படகை சமாசத்திற்கு வழங்கியிருந்தது. எனினும் நீண்டநேரம் மீன்களைப் பழுதடையாது பாதுகாத்து வைத்திருக்கக் கூடிய வசதிகள் முழுமையாக இப்படகில் இல்லை.

இதனைக் கருத்தில் கொண்டு படகில் மேலும் வசதிகளை உருவாக்கும் நோக்கில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இந்த நிதியுதவியைச் செய்துள்ளது.

அடுத்துவரும் மாதங்களில் ஏற்படும் காலநிலை மாற்றங்களால் அதிகளவு மீன் பிடிக்கக் கூடியதாக இருக்கும். இந்த 'கூலர்' படகில் மேலும் வசதிகள் செய்ய வேண்டியதன் அவசியம் கருதியே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது-' என்றார். (202-111)

## பொலிகண்டி இருப்புமூலை சித்தி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று

வடமராட்சி,செப்.10

பொலிகண்டி இருப்பைமூலை (உப்புக்கிணற்றடி) அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் சித்திரத்தேர், சித்திரச் சப்பரம் ஆகியவற்றின் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வெள்ளோட்டத்திற்கான சிறப்புக் கிரியைகள், பூஜைகள் என்பனவற்றை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ.திபதர்ஷ்ஷணசர்மா மேற்கொண்டு வெள்ளோட்டத்தை நிறைவேற்றி வைப்பார். (சிறப்பு மலர் 5 ஆம் பக்கத்தில்).

(203-236)

# 1000 சி.டி.எம்.ஏ.இணைப்புக்கள் இதுவரை மீள வழங்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சி.டி.எம்.ஏ. தொலை பேசி இணைப்புக்களில் இதுவரை ஆயிரம் இணைப்புக்கள் மீள வழங்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் முன்னர் சுமார் 7 ஆயிரம் சி.டி.எம்.ஏ.தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவை துண்டிக்கப்பட்டன.

சி.டி.எம்.ஏ.தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றவர்கள் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடன் பொலிஸ் அனுமதி பெற்று வழங்கும் பட்சத்தில் அவர்களுக்கான இணைப்புக்களை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சி.டி.எம்.ஏ. தொலைபேசிப் பாவனையாளர்கள் பொலிஸ் அனுமதியைப் பெற்று ரெலிக்கொம் நிறுவனத்தில் கையளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு பொலிஸ் அனுமதியைச் சமர்ப்பித்தவர்களில் ஆயிரம் பேருக்கு இதுவரை தொலைபேசி இணைப்புக்கள் மீள வழங்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (50)

# தமிழகத்தின் வயலின் மாமேதை குன்னக்குடி சென்னையில் காலமானார்

சென்னை, செப்.10



தமிழகத்தின் பிரபல வயலின் இசைவிற்பன்னர் குன்னக்குடி வைத்தியநாதன் தமது 71 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்னையில் காலமானார்.

திடீரென இவர் சுகயீனமடைந்ததையடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என்று தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இவர் வயலின் இசைத்துறையில் தனது விரல் லாவகத்தினால் தனக்கெனத் தனிப்பாணியை உருவாக்கி, மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்துக் கொண்டவர்.

தமிழக இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராக பல ஆண்டுகள் இவர் பணியாற்றியவர். அத்துடன் சமீபத்தில் தமிழக அரசின் கலைமாமணி விருதையும் இவர் பெற்றார். வயலின் இசையில் விற்பன்னராக விளங்கியது மட்டுமல்லாது. பல தென்னிந்தியத்திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளதுடன் பின்னனிப்பாடல்கள் சிலவற்றையும் இவர் பாடியுள்ளார். அவர் சில திரைப்படங்களிலும் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் மறைவு தமிழ் இசைக்கும், தமிழ்த்திரையுலகத்திற்கும் பேரிழப்பாகும். (சி)

## நகரச் சுற்றாடல் கடைகளில் பாவனைக்குதவாத பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்.நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத காலாவதியான உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் நகரப்பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர். அதன் போது காலாவதியான பிஸ்கட், லெமன் சோடா என்பவை கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் எச்சரிக்கப்பட்டனர். (202)

# நெடுந்தீவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

நல்லூர், செப்.10

நெடுந்தீவில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குழாய்க் கிணறு மூலம் பெறப்படும் நீரும் உவர்த்தன்மையுடன் இருப்பதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு கிழக்கு ஆகிய பிரதேச மக்கள் தற்போது 5-6 மைல் தூரத்திலுள்ள காராப்பிட்டிக்குச் சென்று அங்குள்ள கிணறு ஒன்றிலிருந்தே குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

இங்கு குடிதண்ணீரைப் பணத்திற்குப் பெற்றுக் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. கிணறு ஒன்றைக் குத்தகைக்கு எடுத்து, அதிலிருந்து எடுத்து வரப்படும் தண்ணீர் 20 முதல் 30 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (202-111)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 26 | 11.09.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | பி.ப. 01.58வரை |
| நட்சத்திரம் : | உத்தராடம் |
| | மு.இ. 8.37வரை |
| | ஏகாதசி விரதம் |
| சுபநேரம் : | 07.33 - 09.03 |
| ராகுகாலம் : | 01.33 - 03.03 |

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,செப்.10

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கோபுரத்தின் புதிய காண்டாமணி ஒலி எழுப்பும் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள், சுவாமி சி.சித்ரூபானந்தா ஆகியோர் நிகழ்த்துவர். வாழ்த்துரையை பேராசியர் அ.சண்முகதாசும், நூல் வெளியீட்டுரையையும் மதிப்பீட்டுரையையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் நிகழ்த்துவர். (202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

வட்டுக்கோட்டை, துணவி ஞான வைரவ ஆலய சங்காபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

விநாயகர் வழிபாடு, சங்காபிஷேகம், வசந்தமண்டபப் பூஜை, சுவாமி வீதி வலம் வருதல் என்பன இடம்பெறும்.

பிரம்ம ஸ்ரீ கிரியா கலாமணி சி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

கொழும்புத்துறை, பாண்டியன் தாழ்வு நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மணவாளக் கோலவிழாவும் சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

காலை 9 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெற்று விசேட பூசை , பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம் பெறும். பிற்பகல் 2.30 மணிக்கு விசேட பூசை இடம்பெற்று வைரவப் பெருமான் வீதியுலா வருவார். (203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

பண்ணாகம் முருகமூர்த்தி ஆலய எழுந்தருளி விநாயகர் மணிக்கோபுர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6மணி தொடக்கம் 7.37 மணி வரையுள்ள சுப நேரத்தில் இடம் பெறவுள்ளது. (203-28)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

கரவெட்டி, செப்.10

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்வில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'அறம் செய' என்னும் தலைப்பில் இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (203-70-236-72)

# பாரதி விழா

யாழ்ப்பாணம், செப்.10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினர் நடத்தும் பாரதிவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் வை.க.சிற்றம்பலம் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி கலாநிதி எஸ்.செல்வரஞ்சிதம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலய அதிபர்
திரு.வாமதேவன் அவர்களின் பாசமிகு தாய்
**திருமதி சண்முகராஜா அன்னலட்சுமி**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர், பணியாளர்,
மாணவர்கள்
திருநெல்வேலி. கருணாலயம் சிறுவர் இல்லம். (78303)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ( வ-து)
திருநெல்வேலி கிழக்கு,கோப்பாய்
பதிவு இலக்கமும் திகதியும்: ஜே/1639 - 12.05.1976

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதி பெற்ற உறுப்பினர் பட்டியல்கள் 10.09.2008 ஆம் திகதியிலிருந்து 17.09.2008 ஆம் திகதி வரையுள்ள 08 நாள்களுக்கு எமது கிளை நிலையங்களிலும் கிளை நிலையங்கள் இயங்காத இடங்களில் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உபஅலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாக்காளர் பட்டியல் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் உறுப்பினர்கள் எழுத்து மூலமான பதிலை 24.09.2008 ஆம் திகதிக்குப் பிந்தாது செயலாளர்,யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப்பொதுச்சபை கூட்டங்களுக்குச் சமூகமளிக்கவோ, வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்களாவர். (முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தவரும், ஒரு முழுப் பங்கு ரூபா 100/-ஐ செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்)

கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதி,இடம் மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

09.09.2008 (சி/554528) செயலாளர்

## மெகா

A/L 2008 பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் கணனி உயர் கல்வியில் ஆர்வம் உடைய அவைருக்கும் ASIAN-CSC வழங்கும் கணனிக் கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில்.....

**75% வரை வெல்லுங்கள்**

**பரீட்சை அனுமதி இலவசம்**

பரீட்சை திகதி : **September 13th & 14th**

## ASIAN COMPUTERS

பரீட்சைக்கான இலவச அனுமதிகளை கீழ்வரும் ASIAN கிளைகளில் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

**விரையுங்கள் !!! வெற்றிபெறுங்கள் !!!**

| யாழ்ப்பாணம் | கிளை நெல்லியடி |
|---|---|
| இல 2G , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222-5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 |

## மரண அறிவித்தல்

### கதிரவேலு விநாயகமூர்த்தி
*(இளைப்பாறிய ஆசிரியர்)*



மூளாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும்வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு விநாயகமூர்த்தி (07.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2008) புதன் கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மூளாய் கிழக்கு, சுழிபுரம். (77295)

## சாவகச்சேரியில் இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.10

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி நெறியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் சாவகச்சேரி நவீன சந்தை 'விமலாஸ்' வர்த்தக நிலையத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நீவரத்தினம் அறிவித்துள்ளார். (203-207)

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
*91/4, காரைநகர் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.*
தொடர்புகட்கு: 0775150608
(78305)

## தவறிவிட்டது

கந்தையா இரத்தினசிங்கம் என்பவரது (அன்னமலை, மட்டக்களப்பு எனும் முகவரியுடையது) தே.அ.அட்டை 29.08.2008 அன்று K.K.S. வீதி, நாவலர் வீதி ஆகிய இடங்களில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.சன்மானம் வழங்கப்படும்.
**மந்தாகினி கொமினிகேஷன்,**
406, K.K.S.வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 3500

## தவறிவிட்டது

வளாகவீதி திருநெல்வேலியைச் சேர்ந்த நவரட்ணம் இராஜேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (722913264V) கடந்த (08.09.2008) திங்கட்கிழமை பலாலி வீதியில், திருநெல்வேலிக்கும் யாழ்.நகரப்பகுதிக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் ஒளி அழகன் ஸ்ரூடியோ, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P.077 9587256 (78304)

## தவறிவிட்டது

இணுவில் தெற்கு, இணுவில் என்னும் முகவரியையுடைய சுப்பையா தருமராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (542852305 X) மற்றும் இராணுவ அடையாள அட்டை (07.09.2008) ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழைக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் அண்ணா கோப்பி நிறுவன கிளைகளில், அல்லது அண்ணா கோப்பி Sales வாகனங்களில் ஒப்படைத்துதவவும்.
(சி/554556)

# பால்மா வகைகளின் விலை இப்போதைக்கு உயராது!

கொழும்பு, செப்.10

பால்மா வகைகளின் விலைகளை இப்போதைக்கு அதிகரிப்பது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்திருக்கிறது. இந்தமாத இறுதியிலிருந்து பால்மா விலைகள் உயரும் என்று தகவல்கள் வெளியாகியிருப்பதில் எந்த உண்மையும் இல்லை என்றும் அதிகாரசபை அறிவித்திருக்கிறது.

விலை அதிகரிப்புத் தொடர்பாக பால்மா நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் எந்தக் கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை என்று அதிகாரசபையின் தலைவர் றூமி மர்சூத் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த விலை உயர்வு தொடர்பாக அடுத்த மாதத்திற்குப் பின்னரே பால்மா நிறுவனங்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் கோரிக்கை விடுக்க முடியும் என்றும், இருப்பினும் அது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையின் விலை நிர்ணய சபையே இறுதி முடிவு எடுக்கும் என்றும் அவர் மேலும் கூறினார். (சி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 07 . 02 . 1947



உதிர்வு 11 . 08 . 2008

### அமரர் இராசதுரை ஜெகதீஸ்வரன்


அன்பின் உறைவிடமே! பாசத்தின் திருவிளக்கே!!
அன்பால் எமை அரவணைத்து
பண்பால் பலர் போற்ற வாழ்ந்த உத்தமரே!

11.08.2008 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (10.09.2008) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*38, வைரவர் கோயில் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.*
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள். (78301)

# HND @ IDM JAFFNA

## BTEC Higher National Diploma in Computing
## (General, ICT System Support, Software Development)





சர்வதேச தரம் வாய்ந்த BTEC-edexcel International நிறுவனத்தின் HND பயிற்சி நெறியானது 02 வருடக் கற்கை நெறியாகும். இக்கற்கை நெறி 04 Semesters களைக் கொண்டது. ஒவ்வொரு Semesters உம் 06 மாத காலப் பகுதியைக் கொண்டவை. இக்கற்கை நெறியின் முதல் இரு Semesters களையும் பூர்த்தி செய்த மாணவர்கள் (01 year) BTEC-edexcel International இன் Higher National Certificate ஐ பெறுவதற்கு தகுதியுடையவர்கள்.

**NEW BATCH STARTS ON 10/09/2008 AT 9.30 AM.**

இச்சான்றிதலானது சர்வதேச தரம் வாய்ந்ததுடன் மாணவர்கள் USA, UK, Australia போன்ற நாடுகளில் சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பை 02ம் வருடத்திலிருந்து தொடர முடியும். மேலும் 04 Semesters களை பூர்த்தி செய்த மாணவர்கள் (02 Year) மேற்குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களில் Final Year (3rd Year) பட்டப் படிப்பைத் தொடர முடியும். இக்கற்கை நெறிகள் அனைத்தும் கடந்த 4 வருட காலமாக IDM யாழ் கிளையில் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### University Degree Path




Entry Requirements:
GCE O/L or GCE A/L

**IDM Affiliated University College**
216, NAVALAR ROAD, JAFFNA
021-2229901

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவியடியில் கொலையுண்ட தாய் மற்றும் மகனின் சடலங்களில் அடி காயங்கள்; நகைகளும் அபகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.10

நீராவியடியில் மணிக்கூண்டு வீதி ஒழுங்கையில் நேற்று முன் தினம் மாலை மீட்கப்பட்ட தாய், மகன் ஆகியோரின் சட லங்களில் அடிகாயங்கள் காணப்பட்டன. தாயிடம் இருந்த நகைகள் அபக ரித்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

நேற்று இடம்பெற்ற மரண விசாரணைகளின் போது இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

நீராவியடியில் மணிக்கூண்டு வீதி ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் தாய் ஒருவரினதும் அவரின் மகனினம் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தது தெரிந்ததே. அந்தச் சடலங்கள் ஞானேஸ் வரக்குருக்கள் நாகேஸ் வரி (வயது - 49), அவரது மகனான மனோராஜ் (வயது - 10) ஆகியோருடையவை என்று இனங்காணப் பட்டிருந்தன.

யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் நேற் றுக் காலை சம்பவ இடத்தில் விசாரணை களை நடத்தினார்.

தாயின் தலையிலும் உடம்பிலும் அடி காயங்களும், சிறுவனின் தலை, முகம், கால் பகுதிகளில் அடிகாயங்களும் காணப் பட்டன. தாய் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, தோடு, மூக்குத்தி ஆகியன காணா மற்போயிருந்தன என்றும் விசாரணை யில் தெரிவிக்கப்பட்டது.

வெளியிலிருந்து வந்த கொள்ளையர் கள் இருவரையும் தாக்கி அவர்களின் நகைகளை அபகரித்து சென்றிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் இரு சட லங்களையும் புதைக்கும் படியும் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)


யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றத்தினரின்

**பாரதி விழா - 2008**



இடம் : ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை.

காலம் : 12. 09. 2008 (வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி)

பிரதம விருந்தினர் : முதுபெரும்புலவர் பண்டிதர் வை. க.சிற்றம்பலம் அவர்கள்

சிறப்பு விருந்தினர் : செல்வி கலாநிதி எஸ்.செல்வரஞ்சிதம் (சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சி நிரல்**

1. அமைதி (இறைவணக்கம்)
2. மங்கல விளக்கேற்றல்
3. தமிழ்த்தாய் வாழ்த்து
4. தலைமையுரை: செல்வன் ம.ஜெனிஸ்ரன் (தமிழ் மன்றத் தலைவர்)
5. ஆசியுரை : அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார்
6. தொடக்கவுரை : திரு. என். ஏ. விமலேந்திரன் (முதல்வர், யாழ்ப்பாணக் கல்லூரி)
7. பிரதம விருந்தினர் உரை
8. சிறப்பு விருந்தினர் உரை
9. பாரதி பாடல்கள் : கல்லூரி மாணவிகள்
10. பாரதி இசை நாட்டியம் 1
11. உரைச் சித்திரம் : தரம் 6 மாணவர்கள்
12. பாரதியார் கவிதைகள் : தரம் 12
13. பாரதி கண்ட புதுமைப்பெண் : தரம் 10
14. பாரதி இசை நாட்டியம் 11
15. பாரதியும் பத்திரிகையும் - தரம் 8
16. லயக்கோலம்
17. நன்றியுரை : செல்வி எல்.ரி.சாலினி (தமிழ் மன்றச் செயலாளர்)
18. பாரதி இசைநாட்டியம் 111
19. இசை நாடகம் : பிரதம பாடசாலை
20. வில்லுப்பாட்டு : கவிதை சிரித்தது (கல்லூரி ஆசிரியர் குழாம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை. (J-554567) அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி.


## கல்வயலில் இரவுநேரம் வாகன உரிமையாளர் கடத்தல்

யாழ்ப்பாணம், செப்.10

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் குடும் பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார். இதனால் சாவகச்சேரிப் பகுதியில் பெரும் பதற்றம் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இச் சம்பவம் நடைபெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் ஜெயக்குமார் (வயது 45) என்று நான்கு பிள்ளை களின் தந்தையே கடத்தப்பட்டவர்ஆவார்.

கடத்தப்பட்டவர் 'ஹை-ஏஸ்' வாகனம் வாடகைக்கு விடுபவர் என்பதால் வீதியில் நின்று அழைத்த போது வெளியே வந்தார். அப்போது அவர் கடத்திச் செல்லப்பட் டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## மரண அறிவித்தல்

### நாகேஸ்வரி ஞானேஸ்வரக்குருக்கள் ஞானேஸ்வரக்குருக்கள் மனோராஜ்

(4ஆம் ஆண்டு மாணவன், யா/இ.ஆ.பாடசாலை)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்களான ஞானேஸ்வரக்குருக்கள் நாகேஸ்வரி, ஞானேஸ்வரக்குருக்கள் மனோராஜ் ஆகியோர்நேற்றுமுன்தினம் (08.09.2008) திங்கட்கிழமை அகாலமரணமானார்கள்.

அன்னார்கள் காலஞ்சென்ற கண்டி நாகேந்திரக்குருக்கள் - அமிர்தாம் பிகை அம்மா ஆகியோரின் அன்பு மகளும், அன்புப் பேரனும், அத்தியடி யோகீஸ்வரக்குருக்களின் அன்பு மரு மகளும், அன்புப் பேரனும் ஆவார்கள்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.09.2008) மாலை 6 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கள் கோம்பயன்மணல் இந்துமயா னத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

நாகேந்திரபீடம், 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி.

தகவல்: நா.அமிர்தாம்பிகை அம்மா, நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் மற்றும் சகோதரர்கள்.

(78326)


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



அமரர் **கந்தையா முருகேசு**

தாயின் மடியில் 07.04.1930 ஆண்டவன் அடியில் 11.08.2008

திதி: பூர்வபட்ச தசமி- 10.09.2008

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங் களை வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் உதவி கள் பல செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இன்று (10.09.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (78315) குடும்பத்தினர்.



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

A/L 2008 கணக்கியல்துறை மாணவர்களிற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட

கணக்கியல் துறையில் வேலைவாய்ப்புக்களை அதிகம் கொண்ட ஒரே கற்கைநெறி!

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING

QUICK BOOK ACCPAC MYOB TALLY

உலகின் முன்னணி கணக்கியல் மென்பொதிகளூடாக தமிழ்மொழி விளக்கத்துடன் நிதிக்கணக்கீடு கிரயக்கணக்கீடு முகாமைக்கணக்கீடு இருப்புக்கட்டுப்பாடு வரி (VAT) வங்கிஇணக்ககூற்று..... அனைத்தையும் உள்ளடக்கி கற்பிக்கப்படும்..

Weekday Batch: 11/08/2008 16/08/2008 11.00 A.M
Weekend Batch: 13/08/2008 14/08/2008 01.00 P.M


## 'யுனிசெவ்' திட்ட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.10

யாழ். கல்வி வலயத்தில் 2007 ஆம் ஆண்டு 'யுனி செவ்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத் தப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்கான கொடுப்பனவை வலய நிதிக் கிளை யில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் [illegible] (...-ரி)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி தில்லையம்பலம்.



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, இராமநாதபுரத்தை வசிப்பிடமா கவும் கொண்ட இளையதம்பி தில்லையம் பலம் 07.09.2008 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளை யதம்பி - செல்லம் தம்பதியரின் புதல்வனும் இளையதம்பி - பொன்னம்மாவின் மரு மகனும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சேதுப்பிள்ளை ஆகியோரின் கணவ ரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பூரணம் மற்றும் இராசையா, காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சித்திராதேவி, தெய்வேந்திரராசா, தேவராசா, தேவ காந்தன், காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் சாந்தினி, தயாளினி, வசந்தினி, சந்திரமோகன், சந்திரகுமார், காலஞ்சென்ற சுதாங் கனி ஆகியோரின் தந்தையும் சின்னராசா, புனிதவதி, இராஜேஸ் வரி, வரதலட்சுமி, அசோக்குமார், ஜானகி, உஷா ஆகியோரின் மாம னும் சுரேஸ், றமேஸ், ராதிகா, பிரகாஷ், சதீஸ், பவித்தா, கிஷாந், வாணி, பகீர், மதி, சுமன், கண்ணன், கோபி, கவி ஆகியோரின் பேர னும் நிருஜன், சியானி, நிதுஷனா, சங்கவி, சாம்பவி, டனிஷா, லக்ஷன், நிரோஜன், மிலானி, சிசானுஜன், திலக்கஜன் ஆகி யோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2008 அன்று கிளி நொச்சி, இராமநாதபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சித்திராதேவி (கோப்பாய்) 021 222 5959
தெய்வேந்திரராசா (சுவிஸ்) 0041794042047
தேவராசா (ஜேர்மனி) 00492131201797
தேவகாந்தன் 0112546900
பகீர் (கனடா) 001416858-2834

தகவல்: தேவகாந்தன்.

### கனகு பரம்சோதி(மேரி)



கனகு பரம்சோதி(மேரி) நேற்று (09.09.2008) செவ்வாய்க்கிழமை கத்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன் னம்மா(பூநகரி),தங்கராஜா(அரியாலை)மற் றும் மனோன்மணியின் அன்புச் சகோதரி யும், இரத்தினேஸ்வரி(வவுனியா), கனகேஸ் வரி(ஜேர்மனி),தவமணிதேவி, அரியரத்தினம், விமலாதேவி, ரஞ்சிதமலர்(வவுனியா),திலகநாதன் (யாழ். போதனா வைத்தி யசாலை),ஆகியோரின் அன்புத் தாயாரும், வல்லிபுரம் (வவு னியா),பங்கசபவனம்(ஜேர்மனி), இராமநாதன் (இத்தாலி), வின்சலா,செளந்தரராஜன் (தேவ ஊழியன், A.O.G சபை), நாகலிங்கம்(வவுனியா),ஜெயக்குமாரி (யாழ்.போதனா வைத் தியசாலை) ஆகியேரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் அரியாலை மேற்கு, 39,கனகரத்தினம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் கொட்டடி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் யாவ ரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

39,கனகரத்தினம் வீதி, அரியாலை. (78323)

தகவல்: க.திலகநாதன்-மகன்.

### வரப்பிரகாசம் யோசேப்



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் யோசேப் நேற்று (09.09.2008) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் - பரிபூரணம் ஆகியோ ரின் மகனும், காலஞ்சென்ற அருளம்மா வின் அன்புக் கணவரும், காலஞ்சென் றவர்களான அருளம்மா, சம்மிக்கேல், சின்னத்தங்கச்சி, முத்தம்மா மற்றும் மரியமுத்து, சுவாம் பிள்ளை, பேதுறுப்பிள்ளை, தவமணி, மேரியம்மா ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், பெனடிற் இராஜதுரை, அல்பிரட் தம்பி ஐயா (ஜேர்மன்), தம்பிஇரத்தினம் (நோர்வே), தங்கராணி (ஜேர்மனி), யோகராணி, மாதினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேபிவசந்தா, கொர்நேலியா (ஜேர்மனி), திகழ்மதி (நோர்வே), சோமசுந்தரம் (ஜேர்மனி), அமலதாஸ், லக்ஸ்மிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், இராஜமோகன், ராஜகோபால், வசந்தராணி (லண்டன்), கம லராணி, ராஜ்குமார் (லண்டன்), பிரசாத், பிரதீபா, பிரவீந்தா, ஜினா (ஜேர்மனி), சுபாசினி (கொழும்பு), மரூட் (ஜேர்மனி), சிரோமி (பிரான்ஸ்), டெறின் (கனடா), சிகான் (பிரான்ஸ்), டெரிக், ஐரிஸ் நிலுசா (கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), மதன் சாந்தமரி (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.09.2008) பி.ப. 3 மணிக்கு நடைபெற்று, பூதவு டல் திருப்பலிக்காக புனித மிக்கேல் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ரணசிங்கம் - அமலதாஸ் (முன்னாள் களஞ்சிய முகாமையாளர் சதோசா). யோகராணி (மனைவி).

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (78324)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகரத்தின் ஊடான போக்கு வரத்துகள் எவையும் இடம்பெற வில்லை. மன்னார், வன்னிக்கான போக்குவரத்துக் களும் நடைபெற வில்லை. மக்கள் வெளியே வராமல் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர்.

படையினர் நடமாட்டமே நகரில் காணப் பட்டது. கூடுதலான படையி னரும் குவிக் கப்பட்டிருந்தனர்.

இதேவேளை-

கொழும்பு மற்றும் வெளி இடங்களில் இருந்து வந்த பயணிகள் வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும் ஈரப்பெரிய குளத்தில் தடுத்து வைக்கப்பட்டன. அவற் றில் பயணம் செய்தவர்கள் நேற்றுப் பகல் வரை வவுனியா வந்து சேரவில்லை.

(அ-1)

## கனகராயன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகராயன் குளத்துக்கு வடக்கே அமைந் துள்ள விடுதலைப்புலிகளின் முகாம் மீது பிற்பகல் ஒரு மணிக்கும்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டுக் குளத்துக்கு வடகிழக்கே அமைந் துள்ள முகாம் மீது பிற்பகல் 2.35 மணிக்கும்-

'ஜெற்' விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புகளுக்கு பலத்த இழப்பு ஏற் பட்டுள்ளது என்பதை விமானி உறுதி செய்துள்ளாராம்.

(அ-1-தி)

## தாக்குதலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 விமானப் படையினர் உட்பட மொத் தம் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு ஊடகத் தகவல் நிலையம் நேற்று இரவு இத்தகவல்களை வெளியிட்டது.

காயமடைந்தவர்கள் வவுனியா, அநுராத புரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தொடர் ஷெல் தாக்குதலிலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டது என்றும் படைத்தரப்பு தெரிவித்தது.

(அ-1)

## தாக்குதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வ அறிக்கை ஒன்றை விடுத்தனர். அதிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

இலங்கைப் படையினரின் வன்னித் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள வான்படையினரின் வான் கண்காணிப்பு ராடர் நிலையத்தை இலக்குவைத்து செவ் வாய்க்கிழமை விடிகாலை 3.05 மணிக்கு கரும்புலிகள் அதிரடித்தாக்குதலை நடத்தி னர். இதில் அந்த ராடர் நிலையம் முற்றாக அழிக்கப்பட்டது.

அதியுயர் பாதுகாப்புக்கொண்ட வான்படை மற்றும் வன்னிக் கூட்டு நடவடிக்கைத் தலை மையகம் உள்ளடங்கிய தளத்தினுள் கரும் புலிகள் ஊடுருவி உள்நுழைந்து தாக்குதல் நடத்திய அவ்வேளை, இவர்களின் உதவியு டன் படைத்தளத்தின் மீது வான்புலிகளின் விமானத் தாக்குதல்களும், கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணியினரின் செறிவான ஆட் லறி பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டன.

**20க்கும் அதிகமான படையினர் பலி**

இத்தாக்குதல்களில் படையினர் 20க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். வெடிபொருள் களஞ்சியங் களும், தொலைத்தொடர்புக் கோபுரமும், தொலைத்தொடர்பு தொழில் நுட்ப ஆய்வக மும், வானூர்தி எதிர்ப்பு ஆயுதமும் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன. படையினரின் வன் னித் தலைமையகமும் சிறப்புப் படையணி யின் வன்னித் தலைமையகமும் பெரும் சிதைவுக்குள்ளாயின.

தாக்குதல் நடத்திய வான் புலிகளின் விமா னங்கள் பாதுகாப்பாகத் தளம் திரும்பின.

இத்தாக்குதல்களில் கரும்புலிகள் பத்துப்பேர் வீரச்சாவைத் தழுவி தாய் நாட் டின் விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈகம் செய்தனர் -என்றுள்ளது. (அ-சி)

## ஐ.நா. அமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களை அரசுக்கட்டுப்பாட்டுப் பகுதிக ளுக்கு மாற்றுமாறு இலங்கை அரசாங்கம் கேட்டிருந்தது -

இலங்கை அரசின் அறிவிப்பை கவனத் தில் எடுத்து ஐ.நா பணியாளர்களின் பாது காப்பை உறுதி செய்ய ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது - என்றும் ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியில் வாழும் மக்களின் பாது காப்பைத் தொடர்ந்துஅவதானித்து அவர்க ளுக்கு எந்த வகையில் உதவலாம் என்பதை ஐ.நா அலுவலகம் ஆராயும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ-1)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் விமானங்களில் ஒன்றை முல்லைத்தீவில் வைத்துச் சுட்டுவீழ்த்தின என்று பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்றுக்காலை அரச ஊடகத் தக வல் மத்திய நிலை யத்தில் நடந்த செய் தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

புலிகளின் விமா னத்தைத் துரத்திச் சென்று சுட்டதாகக் கூறப்படும் 'மிக்' ரக குண்டுவீச்சு விமா னத்தைச் செலுத்திச் சென்ற விமானியும் நேற்றைய செய் தியாளர் மாநாட் டுக் குக் கூட்டிவரப் பட் டிருந்தார்.

புலிகளின் விமானம் குண்ட டிபட்டு வீழ்ந்ததை 'மிக்' விமானத்தின் விமானி அவதானித் துள்ளார் என்று செய் தியாளர் மாநாட்டில் கூறப்பட்டது. எனி னும் அது தொடர் பான வேறு ஆதாரங் களோ புகைப்படங் களோ அங்கு சமர்ப் பிக்கப்பட வில்லை.

(அ-சி)

## இந்திரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனித்து வந்தனர் என்றும் -

**புலிகள் தாக்குதல்கள் இந்தியாவின் குட்டை உடைத்தது**

ராடர் கட்டமைப்பு மீதான தாக்குதலில் அவர்கள் காயமடைந்தனர் என்றும் - தெரி விக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் உடனடியாக விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டனர். கொழும்பில் அப்பலோ ஆஸ் பத்திரியில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின் றன என்றும், அவர்களது உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை என்றும் விடயமறிந்த வட்டா ரங்கள் தகவல் வெளியிட்டன.

புலிகளின் விமானங்களின் பறப்பு நகர் வுகளைக் கண்காணிப்பதற்காக இந்தியா தனது 'இந்திரா - II' ரக ராடர்களை இலங் கைக் குக் கொடுத்துதவியது என்ற தகவல் முன்னர் வெளியாகியிருந்த போதிலும், அந்த ராடர் களை இந்திய விமானப் படை யினரே நேரடி யாகப் பிரசன்னமாகி இலங்கைத் தரப்புக்கு இயக்கி, தொழில்நுட்ப ஆலோசனை வழங்கி, பராமரித்து வருகின்றனர் என்பது வெளியே தெரிந்திருக்கவில்லை.

புலிகளின் நேற்றைய தாக்குதல் இந்த விடயத்தில் குட்டைப் போட்டு உடைக்கச் செய்துவிட்டது எனச் சுட்டிக்காட்டும் செய்தி வட்டாரங்கள், புலிகளுக்கு எதிரான இலங் கைப் படைகளின் போரில் இந்தியப் படையி னர் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கின்றமை இந்தத் தாக்குதலினால் அம்பலமான நிலை யில் இந்த விவகாரம் இலங்கையிலும், இந்தி யாவிலும், புலம்பெயர் தமிழர்கள் வாழும் பிர தேசங்களிலும் பலத்த அதிர்ச்சி அலைக ளைத் தோற்றுவிக்கும் என்றும் தெரிவித்தன.

புலிகளின் நேற்றைய தாக்குதல் தொடர் பான விடயம் நேற்று நண்பகல் கொழும்பில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலை யத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட் டிலும் எதிரொலித்தது.

''வவுனியாத் தளம் மீதான புலிகளின் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் யாரும் காய மடைந்தனரா? அவர்களுக்குப் பாதிப்பு ஏற் பட்டதா?'' - என்று செய்தியாளர் ஒருவர் அங்கு கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சா ளர் பிரிகேடியர் உதய நாணயக்கார ''இராணுவ முகாமுக்குள் வெளிநாட்டவர்கள் எப்படி வருவார்கள்?'' -என்று பதில் கேள்வி கேட்டு சமா ளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**18 வருடங்களின் பின்னர்....**

இலங்கையில் இருந்து அமைதி காக்கும் படையினர் 1990 ஆம் ஆண்டில் வெளி யேறிய பின்னர், - 18 வருடங்களின் பின்னர் புலிகளின் தாக்குதலில், அதுவும் விமானத் தாக்குதலில் இந்தியப் படையினர் இருவர் காயமடைந்துள்ளனர் என்று இந்தியாவின் பிரபல பத்திரிகைகளில் ஒன்றான 'ஹிந்துஸ் தான் ரைம்ஸ்' விமர்சித்துள்ளது. (அ-1)

## செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் - வன்னிப் பகுதியில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற பிரதேசங்களில் அரசபடைகளுக்கும் புலி கள் அமைப்பினருக்கும் இடையில் அதிகரித் துவரும் மோதல்கள் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் தொடர்ந்தும் இடம் பெயர்ந்து வருவதாகவும் தெரிவிக் கப்பட் டுள்ளது. (அ-1)

## வவுனியா ஆஸ்பத்திரியில் பதினொரு சடலங்கள்

வவுனியா, செப்.10

வவுனியா விமானப்படை முகாம்மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப்புலி கள் எனத் தெரிவித்து 11 பேரின் சடலங் கள் வவுனியா ஆஸ்பத்திரியில் படை யின ரால் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்தது.

## வவுனியா படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் ஒன்றிலிருந்து நேற்று அதி காலை 3 மணிக்கு சற்றுப் பின்னாக புறப் பட்ட புலிகளின் இரண்டு மர்ம விமானங்கள் வன்னிப் படைத்தலைமையகத்துடன் இருந்த விமானத் தளத்தில் பொருத்தப்பட்டிருந்த 'ராடர் கட்டமைப்பை' இலக்குவைத்து அடுத் தடுத்து நான்கு குண்டுகளை வீசின.

புலிகளின் திடீர் விமானத் தாக்குதலை அடுத்து வவுனியா நகரம் அதிரடியாக உஷார் படுத்தப்பட்டது. நகரை அண்டிய பகுதிகளில் உள்ள முகாம்களில் இருந்து வானத்தை நோக்கி விமான எதிர்ப்பு வேட்டுகள் தொடர்ந்து தீர்க் கப்பட்டன. வானத்தில் சீறிப்பாய்ந்த அந்த வேட்டுக்களால், அப்பகுதியில் வானம் ஒளிர்ந்து வாணவேடிக்கை போன்ற காட்சி தென்பட்டது.

புலிகளின் இரண்டு விமானங்களும் நான்கு குண்டுகளைத் வவுனியா 'ராடர்' தளத்தை இலக்கு வைத்து வீசிவிட்டுச் சென்றதும், சற்று நேரத்துக்குத் தொடர்ந்து முழங்கிய படையினரின் விமான எதிர்ப்பு வேட்டுகளால் வவுனியா நகரமே அதிர்ந்தது.

அது ஓய்வுக்கு வரும் சமயத்தில் - காலை 3.45 மணி முதல் - தொடர்ந்து 6.30 மணி வரை - தமது ஓமந்தைத் தளத்துக்கு அப்பால் இருந்து புலிகள், தங்கள் ஆட்லறிகளை இயங்கவைத்து, வவுனியாபடைத்தளபதி யின் கட்டளைத் தலைமைய கப் பிரதேசத்தை இலக்கு வைத்துத் தாக்கத் தொடங்கினர்.

**கரும்புலிகள் அணி உட்புகுந்தது**

இதேசமயம், கரும் புலிகளின் அணி ஒன்றும் படையினரின் வன்னித் தலை மையகப் பிரதேசத்திற்குள் தன்னை உரு மறைப்புச் செய்து லாகவமாக நுழைந்து, அதிரடியாகத் தாக்குதலை ஆரம்பித்தது.

விடியும் வேளையில் புலிகளின் திடீர் பீரங் கித் தாக்குதல்களினால் குண்டுகள் படைத் தலைமையகத்துக்குள் விழுந்து வெடிக்கத் தொடங்கியதும் அங்கிருந்த படையினர் பதுங்குகுழிகளுக்குள் பாதுகாப்புத் தேட, அந்த இடைவெளியைப் பயன்படுத்தி கரும் புலிகள் அணி படைத்தலைமையகத்துக்குள் தான் விரும்பிய இடங்கள் வரை முன்னேறித் தனது கைவரிசையைக் காட்டியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் கரும்புலி கொமாண்டோ அணி, முன்னர் திட்டமிட்டபடி, தலைமைய கத்துக்குள் முக்கிய வசதிகள், கேந்திர நிலைகள் போன்றவற்றை அழித்து நாசமாக் கியது என்றும் -

இறுதியில் தலைமையகத்துக்குள் நடந்த சமரில் கரும்புலி கொமாண்டோ அணியினர் களப்பலியாகினர் என்றும் - தெரிவிக்கப் பட்டது.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் இருள் நீங்கி, விடியும் சமயம் புலிகளின் கரும்புலி கொமாண்டோ வீரர்கள் களப் பலியாக நேற்றைய தாக்குதல் முடிவுக்கு வந்ததாகக் கூறப்பட்டது.

(அ-உ)


ICDL
சர்வதேச தரம் வாய்ந்த இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு கணனிச் சான்றிதழ்
1. Basic Concepts of IT
2. Using Computer and Managing Files
3. Word Processing
4. Spreadsheets
5. Database
6. Presentations
7. Information and Communication
பிரிவு 1 ஆரம்பம் . 11.09.2008
நேரம் காலை. 10.00மணி
STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road. Jaffna.T.P:0212228147.

இன்று யாழ். நகரில் நாவலரின் புதிய உதயம் NEC இன் முன்னணி ஆசிரியர் குழாம்
கணித உயிரியல் பிரிவு
இரசாயனவியல்:- S.Vasu
பௌதிகவியல்:- K.செல்வன்
உயிரியல்:- V.A.ஞானேந்திரன், E.செந்தூர் செல்வன்
இணைந்த கணிதம்:-S.பூட், B.மயூதரன்
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு:- P.பிரீதன்
பொருளியல்:- N.B.கஜீதரன்
வணிகக்கல்வி:-V.A.ரவிகரன்
கலைப் பிரிவு
தமிழ்:- A.K.கீர்த்திராஜன்
பொருளியல்:- N.B.கஜீதரன்
இந்து நாகரீகம்:- S.பத்மராஜா
புவியியல்:- S.R.பாலா
அளவையியல்:- P.கமல்
வரலாறு:- S.சுஜீகரன்
அரசியல்:- A.K.றொபின்சன்
நாட.அரங்கியல்:- S.சுகந்தன்
இந்துசமயம்:- B.மயூதரன்
கிறிஸ்தவம்:- பூட்
புள்ளிவிபரவியல், இணைந்த கணிதம் } T.தவசேகர்
ஆங்கிலம்:- S.ஜெரசன்
அ/பொ.த 2009, 2010 இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
NEC Clock Tower Road, Jaffna


விற்பனையில்...
TVS Motor Company யின் அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்
பசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

பொருளியல்
NB. கஜீதரன்
Paper class
Mon - Fri } 3-4pm
ஆரம்பம்= 12.09.2008
SHAMROCK (ஈச்சமோட்டை - யாழ்.)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Dip In Computerized Accounting (Tally, Accpack, MYOB, QuickPro)
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
## இன்றும்,நாளையும் பதிவுசெய்வோருக்கு 80 % கற்கை கட்டணச் சலுகை
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

கணக்கீடு
A/L 2008 புள்ளி வழங்கல் திட்டத்தினை பின்வரும் இடங்களில் இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
விக்னா - யாழ் நகர், NEC-மணிக்கூட்டு வீதி.
நாவலர் - ஆனைப்பந்தி, IBC-கண்டுக்குளி

SCC
விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
SCC கல்வி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட சலுகைக்கட்டணம் வழங்குகிறது இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
Dip. In MS Office - 4 Months
Dip. In Desktop Publishing - 4 Months
Dip. In Internet e-mail - 2 Months
Dip. In Hardware Engineering - 4 Months
Dip. In Computer Programming - 6 Months
Dip. In Eng. Drawing & Auto CAD - 3 Months
Dip. In Computerized Accounting - 4 Months
Dip. In Data Base Management System - 4 Months
Dip. In Audio & Video Editing - 4 Months
Dip. In Visual Basic - 4 Months
Dip. In Web Designing - 4 Months
3000/=
Batch I 06.09.2008 Batch II 10.09.2008
Batch III 14.09.2008 Batch IV 19.09.2008
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org